# அத்தியாயம் 2

# தேசிய உற்பத்தியும் செலவினமும்







## 2.1 பொதுநோக்கு

**இலங்கை பொருளாதாரம் 2007இல் பதிவு செய்யப்பட்ட 6.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் உண்மை நியதிகளில் 6.0 சதவீதத்தால் விரிவடைந்தது.** பொருளாதாரம் 6 சதவீதத்திலோ அல்லது உயர்ந்த அளவிலோ தொடர்ந்து வளர்ச்சியடைந்த நான்காவது ஆண்டு இதுவாகும். முதல் ஒன்பது மாதங்களில் பொருளாதாரம் 6.5 சதவீதம் கொண்ட வரவேற்கத்தக்க வீதத்தில் வளர்ச்சியடைந்தது. எனினும், இறுதிக் காலாண்டில் வெளிநாட்டுத்துறை நிகழ்வுகளின் மோசமான தாக்கத்தின் முக்கிய காரணமாக வளர்ச்சி 4.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் சகல மூன்று துறைகளும் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.** வேளாண்மைத்துறையானது முக்கியமாக தேயிலை மற்றும் நெல் உற்பத்தியிலான மீட்சி காரணமாக சிறுபோக காலப்பகுதியலில் பெறப்பட்ட உயர் அறுவடையுடன் 8.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. கைத்தொழில்துறை 6.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததுடன் மிகப் பெரிய துணைத்துறையான தயாரிப்பு 4.8 சதவீதத்தால் விரிவடைந்தது. பணிகள் துறையும் 6.3 சதவீதத்தால் விரிவடைந்ததுடன் மிகப் பெரிய பங்கைக் கொண்டிருக்கும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை துணைத்துறை 2008இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் 5.6 சதவீதத்தால் அதிகரித்தது.

**குறிப்பாக தேயிலை மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் சுருக்கம் காரணமாக வேளாண்மைத்துறையின் 4.0 சதவீத வீழ்ச்சியுடன் நான்காம் கலாண்டின் பொருளாதாரம் மெதுவடைந்தது.** கைத்தொழில் துறையின் அனைத்து நான்கு துணைத்துறைகளுமான சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், தயாரிப்பு, மின்வலு, வாயு மற்றும் நீர் மற்றும் கட்டடவாக்கம் என்பன மெதுவடைந்தமையின் காரணமாக இத்துறை 5.2 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. ஏற்றுமதித் துணைத்துறை 0.9 சதவீதத்தினாலும் இறக்குமதித் துணைத்துறை 0.7 சதவீதத்தினால் சுருக்கடைந்தமையின் முக்கிய காரணமாக மொத்த விற்பனை மற்றும் சில்லறை துணைத்துறை 2.0 சதவீதத்திற்கு மெதுவடைந்தமையுடன் 2008இன் நான்காம் காலாண்டில் பணிகள் துறை 3.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**2008இல் ஒரு சாதகமான வளர்ச்சிக்கு அனைத்து துறைகளும் நேரான பங்களிப்பினை வழங்கின.** சாதனைமிக்க சிறப்பான நெல் அறுவடை, ஒப்பீட்டு ரீதியில் உயர்வான மீன் மற்றும் தேயிலையின் வெளியீட்டுடன் வேளாண்மைத்துறை 7.5 சதவீதம் கொண்ட அதியுயர் துறைவாரியான வளர்ச்சியைப் பதிவு செய்தது.

கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளிலான விரிவாக்கம் முறையே 5.9 சதவீதமாகவும் 5.6 சதவீதமாகவும் விளங்கி 2007 உடன் ஒப்பிடுகையில் மெதுவடைவுகளைக் காட்டுகிறது. கைத்தொழில் துறையிலான மெதுவடைவு தொழிற்சாலைக் கைத்தொழில் மற்றும் கட்டடவாக்கத்துறைகள் உள்ளிட்ட சகல துணைத்துறைகளிலும் அவதானிக்கப்பட்டது. பொருளாதாரத்தில் மிகப் பெரிய பங்கைக் கொண்டுள்ள பணிகள்துறை 2007 உடன் ஒப்பிடுகையில் சிறியளவிலான வீழ்ச்சியைக் காட்டியது. 2007 உடன் ஒப்பிடுகையில் 2008இல் உயர் வீதத்தில் விரிவடைந்த இறக்குமதி வர்த்தகம் மற்றும், அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல்கள் துணைத் துறைகளைத் தவிர பணிகள் துறையிலுள்ள பெரும்பாலான துணைத் துறைகள் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத் துறையின் குறிப்பிடத்தக்க சுருக்கத்துடன் வீழ்ச்சியடைந்தது.

**நுகர்வு மற்றும் முதலீட்டுக் கேள்விகளின் தூண்டுதலினால் உள்நாட்டுக் கேள்வி 7.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** கேள்வியில் காணப்பட்ட மிகை 0.4 சதவீதம் கொண்ட மெதுவான ஏற்றுமதி வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த இறக்குமதிகளிலான உயர் வளர்ச்சியால் ஈடுசெய்யப்பட்டது. பொருளாதாரத்தில் மொத்தக் கேள்வியிலான

**அட்டவணை 2.1**

**நிலையான (2002) விலைகளில் கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்**

| துறை | மாற்ற வீதம் (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களுக்கான பங்களிப்பு (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | 2008(ஆ) |
| **வேளாண்மை** | **3.4** | **7.5** | **6.1** | **15.1** | **11.9** | **12.1** |
| 1. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் காடாக்கல் | **2.3** | **7.3** | **3.8** | **13.2** | **10.8** | **10.9** |
| **1.1** தேயிலை | - 1.8 | 4.3 | - 0.3 | 0.9 | 1.2 | 1.2 |
| **1.2** இறப்பர் | 4.2 | 10.3 | 0.1 | 0.4 | 0.2 | 0.2 |
| 1.3 தெங்கு | 5.1 | 5.2 | 1.0 | 1.2 | 1.4 | 1.4 |
| 1.4 சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | 5.1 | - 2.1 | 0.4 | - 0.2 | 0.5 | 0.4 |
| 1.5 நெல் | - 6.2 | 22.9 | - 1.7 | 6.1 | 1.6 | 1.8 |
| 1.6 கால்நடை வளர்ப்பு | 7.9 | 5.6 | 1.0 | 0.8 | 0.9 | 0.9 |
| 1.7 ஏனைய உணவுப் பயிர்கள | 4.4 | 4.7 | 2.5 | 3.0 | 3.8 | 3.8 |
| 1.8 பெருந்தோட்ட அபிவிருத்தி | 5.8 | 3.5 | 0.2 | 0.2 | 0.3 | 0.3 |
| 1.9 விறகு மற்றும் காடாக்கல் | 5.1 | 7.1 | 0.5 | 0.7 | 0.6 | 0.6 |
| 1.10 ஏனைய வேளாண்மைப் பயிர்கள் | 0.7 | 2.7 | 0.0 | 0.2 | 0.4 | 0.4 |
| **2. மீன்பிடி** | **15.6** | **9.9** | **2.3** | **1.8** | **1.1** | **1.1** |
| **கைத்தொழில்** | **7.6** | **5.9** | **31.6** | **28.3** | **28.5** | **28.4** |
| **3. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்** | **19.2** | **12.8** | **4.8** | **4.1** | **1.9** | **2.0** |
| **4. தயாரிப்புத்துறை** | **6.4** | **4.9** | **16.8** | **14.6** | **17.7** | **17.5** |
| 4.1 பதனிடுதல் (தேயிலை, இறப்பர், தெங்கு) | 2.4 | 5.3 | 0.2 | 0.6 | 0.6 | 0.6 |
| 4.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 6.7 | 5.0 | 15.7 | 13.3 | 15.9 | 15.8 |
| 4.3 குடிசைக் கைத்தொழில் | 5.6 | 4.5 | 0.9 | 0.8 | 1.1 | 1.1 |
| **5. மின்வலு வாயு மற்றும் நீர்** | **4.6** | **2.7** | **1.7** | **1.1** | **2.5** | **2.4** |
| 5.1 மின்வலு | 4.6 | 3.9 | 1.5 | 1.4 | 2.2 | 2.1 |
| 5.2 வாயு | 2.9 | - 10.2 | 0.1 | - 0.3 | 0.2 | 0.2 |
| 5.3 நீர் | 7.1 | 3.6 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| **6. கட்டடவாக்கம்** | **9.0** | **7.8** | **8.3** | **8.4** | **6.4** | **6.5** |
| **பணிகள்** | **7.1** | **5.6** | **62.3** | **56.6** | **59.6** | **59.5** |
| **7. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்** | **6.1** | **4.7** | **22.3** | **19.4** | **24.5** | **24.2** |
| 7.1 இறக்குமதி வர்த்தகம் | 3.3 | 4.7 | 4.5 | 7.2 | 9.1 | 9.0 |
| 7.2 ஏற்றுமதி வர்த்தகம் | 8.8 | 0.9 | 5.9 | 0.7 | 4.7 | 4.4 |
| 7.3 உள்நாட்டு வர்த்தகம் | 7.6 | 6.4 | 11.8 | 11.5 | 10.7 | 10.8 |
| **8. உணவகங்களும் விடுதிகளும்** | **- 2.3** | **- 5.0** | **- 0.1** | **- 0.3** | **0.4** | **0.4** |
| **9. போக்குவரத்து, மற்றும் தொடர்பூட்டல்** | **10.5** | **8.1** | **19.2** | **17.5** | **12.8** | **13.1** |
| 9.1 போக்குவரத்து | 9.3 | 6.3 | 14.5 | 11.5 | 10.8 | 10.9 |
| 9.2 சரக்குக் கையாளல் - துறைமுகங்களும் பயணிகள் போக்குவரத்து | 8.8 | 8.0 | 0.8 | 0.9 | 0.7 | 0.7 |
| 9.3 அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் | 21.5 | 22.3 | 3.8 | 5.1 | 1.4 | 1.6 |
| **10.** வங்கித் தொழில், காப்புறுதி, மற்றும் உண்மைத்துறை, ஏனையவை | **8.7** | **6.6** | **10.9** | **9.5** | **8.7** | **8.7** |
| **11.** வதிவிட சொத்துரிமை | **1.1** | **1.1** | **0.6** | **0.6** | **3.2** | **3.1** |
| **12.** அரச பணிகள் | **6.0** | **5.7** | **6.8** | **7.4** | **7.7** | **7.7** |
| **13** தனியார் பணிகள் | **7.8** | **6.5** | **2.7** | **2.6** | **2.4** | **2.4** |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | **6.8** | **6.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் | 15.3 | - 118.0 | | | | |
| **மொத்தத் தேசிய உற்பத்தி** | **7.1** | **4.7** | | | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

மெதுவடைவு பெரும்பாலும் இவ்வாண்டில் வெளிநாட்டுத் துறையிலான பாதகமான அபிவிருத்திகளால் ஏற்பட்டது. உலகளாவிய பொருளாதாரத்திலான மெதுவடைவுக்கு மத்தியில் குறிப்பாக இவ்வாண்டின் பிற்பகுதியில் ஏற்றுமதித்துறை மந்த நிலையை அடைந்தது.


**வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்துக்காக சீராக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியான மொத்த தேசிய உற்பத்தி 2008இல் 4.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** காரணி வருமானப் பெறுகைகளிலான 93.8 சதவீத சுருக்கத்துடன் இணைந்து காரணி வருமானக் கொடுப்பனவுகளிலான 14.4 சதவீத மெதுவடைவு 2008இல் தேறிய காரணி வருமானத்தை 153.6 சதவீதம் கொண்ட கணிசமான அளவால் சுருங்கச் செய்ததுடன் மொத்தத் தேசிய உற்பத்தி மீது எதிர்க்கணியத் தாக்கத்தை ஏற்படுத்தியது. இது உலகளாவிய பொருளாதாரத்தில் காணப்பட்ட சாதகமற்ற வட்டி வீதங்களின் குறைப்புடன் 2008இல் குறிப்பாக வட்டி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும்.

**நடைமுறைச் சந்தை விலைகளின் நியதிகளில் 2008இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2007இன் ரூ.3,579 பில்லியனிலிருந்து 2008இல் ரூ.4,411 பில்லியனுக்கு 23.2 சதவீதத்தால் அதிகரித்தது.** இது, மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியில் ஏற்பட்ட 2007இன் 14.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 16.3 சதவீத அதிகரிப்பால் எடுத்துக்காட்டப்பட்டவாறு மொத்தப் பொருளாதாரத்தின் விலை மட்டங்களிலான அதிகரிப்புடன் இணைந்து பொருளாதாரச் செயற்பாடுகளிலேற்பட்ட உண்மை விரிவாக்கத்தின் விளைவால் ஏற்பட்டதாகும்.

**2008இல் நடு ஆண்டுக் குடித்தொகையான 20,217,000 மானது 1.0 சதவீதத்தால் அதிகரித்ததுடன் தலைக்குரிய வருமானம் ரூ.218,161 இற்கு 22.0 சதவீதத்தால் அதிகரித்தது.** இது தலைக்குரிய வருமானம் 2007இன் ஐ.அ.டொலர் 1,634 இலிருந்து 2008இல் ஐ.அ.டொலர் 2,014 இற்கான 23.3 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டுகிறது. 2008இல் உண்மை வருமான மட்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முன்னைய ஆண்டிலான 6.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.9 சதவீதமாக விளங்கியது.

**உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2007இன் ரூ.629 பில்லியனிலிருந்து 2008இல் ரூ.623 பில்லியனுக்கு 0.9 சதவீதத்தால் சுருக்கமடைந்தது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இது 2007இன் 17.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுச் சேமிப்புக்களிலான குறைவடைவானது அதிகரித்த இறக்குமதிச் செலவாலும் ஏற்றுமதி வருவாய்களிலான மெதுவடைவாலும் ஏற்பட்டிருக்கக்கூடும். இதேவேளை, வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் மேலும் மோசமடைந்ததன் காரணமாக தேசிய சேமிப்புகள் உள்நாட்டுச் சேமிப்புக்களை விட உயர்ந்த வீதத்தில் வீழ்ச்சியடைந்த போதிலும் தனியார் பணவனுப்பல்கள் 2007 ஐ விட குறைந்த வீதத்திலாயினும் மேம்பாடடைந்தன.

வரைபடம் 2.1 ஆண்டு வளர்ச்சி வீதங்கள்




## 2.2 துறைவாரியான வெளியீடு, கொள்கைகள், நிறுவனரீதியான உதவி மற்றும் பிரச்சனைகள்

### வேளாண்மை

**வேளாண்மைத்துறை 2007இல் பதிவு செய்யப்பட்ட 3.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 7.5 சதவீதம் கொண்ட ஆகக்கூடிய துறை வாரியான வளர்ச்சியை பதிவு செய்தது.** உள்நாட்டு வேளாண்மையில் ஏற்படட அதிகரித்த உற்பத்தி, குறிப்பாக சிறுபோகத்திலான சாதனைமிக்க நெல் உற்பத்தி மற்றும் மீன் உற்பத்தி இத்துறையிலான விரிவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்தது. ஏற்றுமதி வேளாண்மை வளர்ச்சி தேயிலை மற்றும் தெங்கு உற்பத்தியால் வழிநடத்தப்பட்டிருக்கையில் இறப்பர் உற்பத்தியும் சாதகமாக பங்களிப்புச் செய்தது. இருப்பினும், இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் 8.1 சதவீதத்தால் சுருக்கமடைந்த தேயிலை ஏற்றுமதிகளால் பிரதிபலிக்கப்பட்டவாறு உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியால் ஏற்றுமதி வேளாண்மைத்துறை பாதிக்கப்பட்டது.

### ஏற்றுமதி வேளாண்மை

**2008இன் முதலரைப்பகுதியில் தேயிலை உற்பத்தி 19 சதவீதத்தால் அதிகரித்ததுடன், இது நாட்டின் நீண்ட கால வரலாற்றில் ஆண்டின் எந்தவொரு முதலரைப்பகுதியிலும் முன்னெப்போதும் பதிவு செய்யப்படாத சிறந்த செயலாற்றமாக இருந்ததுடன் குறைந்த வெளிநாட்டுக்கேள்வி காரணமாக 2008 இறுதியில் 4.1 சதவீதத்தால் தொடர்ச்சியாக மெதுவடைந்தது.** இவ் அதிகரித்த உற்பத்தி இக் காலப்பகுதியில் பயிரிடப்பட்ட சகல மாவட்டங்களிலும் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகள், தேயிலைத் தொழிற்சாலைகளின் தடங்கலற்ற தொழிற்பாடுகள் மற்றும் நேரம் பிந்தாத கத்தரிப்பு, விதந்துரைக்கப்பட்ட மட்டங்களிலான வளமாக்கிப் பாவனை மற்றும் கிருமிநாசினிகளின் பிரயோகம் என்பன போன்ற சிறந்த வேளாண்மை நடைமுறைகளின் காரணமாக ஏற்பட்டது. எனினும், தேயிலை உற்பத்தி மூன்றாம் காலாண்டில் 1.4 சதவீதத்தால் சிறிதளவாலும் நான்காம் காலாண்டில் 19.4 சதவீதத்தாலும் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்தன. இது, மோசமடைந்து செல்லும் உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்கு மத்தியில் கொழும்பு தேயிலை ஏலங்களில் விலைகள் வீழ்ச்சியடைந்து செல்லும் பின்னணியில், கொழும்பு தேயிலை ஏலத்தில் தயாரிக்கப்பட்ட தேயிலையின் வழங்கலைக் குறைப்பதற்கு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளால் பெருமளவில் ஏற்பட்டது. உலகளாவிய நெருக்கடி, மத்திய கிழக்கு நாடுகள், ரூசியா / பொதுநலவாய கூட்டமைப்பு நாடுகள் போன்ற இலங்கையின் வர்த்தகப் பங்காளர்களைப் பாதித்தது. இது அவற்றின் பொருளாதாரங்களில் நுகர்வைக் குறைத்து அவற்றின் கொள்வனவைத் தாமதித்ததுடன் தாங்கியிருப்புக்களை மீண்டும் நிரப்புவதற்கு தேயிலை விலைகளில் மேலும்

**அட்டவணை 2.2 வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (1997-2000=100)**

| விடயம் | 2007(அ) | 2008(ஆ) | சதவீத மாற்றம் (%) 2007/08 |
|---|---|---|---|
| வேளாண்மை, மீன்பிடி | 113.0 | 124.4 | 10.1 |
| 1. வேளாண்மை | 114.0 | 125.7 | 10.2 |
| 1.1 வேளாண்மை உற்பத்திகள் | 111.0 | 122.9 | 10.7 |
| தேயிலை | 106.3 | 110.6 | 4.1 |
| இறப்பர் | 121.9 | 134.0 | 9.9 |
| தெங்கு | 103.3 | 104.8 | 1.4 |
| நெல் | 117.5 | 145.4 | 23.8 |
| ஏனைய பயிர்கள் | 111.5 | 121.0 | 8.5 |
| 1.2 கால்நடை | 140.6 | 150.1 | 6.7 |
| 2. மீன்பிடி | 106.6 | 116.9 | 9.6 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஏற்படக்கூடிய வீழ்ச்சியையும் எதிர்பார்த்துள்ளன. மேலும், உயர்தரமுடைய கொழுந்துகளை மட்டும் பறிக்கும் விதத்தில் கட்டுப்பாடு விதித்தல், கொழும்பு தேயிலை ஏலங்களில் தேயிலை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக கத்தரித்தலை அறிமுகம் செய்தமை, தேயிலை பயிரிடும் மாவட்டங்களில் நிலவிய வரட்சி மற்றும் வரட்சி நிலைமை காரணமாக உதவுதொகை வழங்கப்பட்டமைக்கு மத்தியிலும் வளமாக்கிப் பாவனையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவும் வளர்ச்சியிலான வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

**இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் தேயிலை விலைகள் முன்னைய ஆண்டின் ஒத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 9.7 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது.** எனினும், இவ்வாண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டில் கொழும்பு தேயிலை ஏலத்தில் தேயிலையின் சராசரி விலைகள் முறையே 34 வீதத்தாலும், 27 வீதத்தாலும் அதிகரித்ததுடன் தாழ்நிலத் தேயிலை உயர்ந்த சராசரி விலை அதிகரிப்பினைப் பதிவு செய்து மொத்த உற்பத்திக்கு 58 சதவீத பங்களிப்பினை வழங்கியது. எனினும், உலகளாவிய நிதியியல் குழப்பநிலைக்கு மத்தியில் குறைவடைந்து செல்லும் கேள்வியை எதிர் நோக்கியமையினால் 2008 செத்தெம்பருக்குப் பின்பு விலைகள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. 2008ஆம் ஆண்டின் மூன்றாம் மற்றும் நாலாம் காலாண்டில் கொழும்பு தேயிலை ஏலத்தில் சராசரி ஏற்றுமதி விலைகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் முறையே 14 சதவீதத்தாலும் 30 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

**நான்காம் காலாண்டில் கொழும்பு தேயிலை ஏலத்தில் விலைகளை உறுதியாக வைத்திருப்பதற்கும் விற்கமுடியாத இருப்புக்களைக் குறைப்பதற்குமான முயற்சியாக 2008 யூலையிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியில் 917 மெற்றிக் தொன்களைக் கொள்வனவு செய்ததன் மூலம் இலங்கைத் தேயிலைச் சபையூடாக அரசு தலையிட்டது.** இத்துடன், கொழும்பு தேயிலை ஏலத்தில் விற்பனை விலைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் இலங்கை தேயிலைச் சபை தனியார் விற்பனைகளைத் தற்காலிகமாக கட்டுப்படுத்தியதுடன் கொழும்பு தேயிலை ஏலத்தில் வழங்கலை மட்டுப்படுத்துவதற்கு சிறந்த தேயிலையைத் தயாரிக்கும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு உற்பத்தியாளர்கள்/ தேயிலைத் தொழிற்சாலைகளை அறிவுறுத்தியது. 2008 திசெம்பரில் அறிவிக்கப்பட்ட பொருளாதார தூண்டற் பொதியைத் தொடர்ந்து அரசு 2009 வரவு செலவுத்திட்டத்தினூடாக கைத்தொழிலை உறுதியாக வைத்திருப்பதற்கு சில வழிமுறைகளையும் அறிமுகப்படுத்தியது. இவ் வழிமுறைகள், தேயிலைக் கொழுந்தின் விலைகள் கிலோகிராமொன்றுக்கு ரூ.40 ஐ அடையும் வரை சிறு தேயிலை உடமையாளருக்கு 50 கிலோகிராம் கலப்பு வளமாக்கியை மூடையொன்று ரூ.1,000 படி வழங்குதல், தேயிலைக் கைத்தொழில் நெருக்கடிக்கு மத்தியில் அரசால் மீள நிறுவப்பட்ட தேயிலை சமநிலை நிதியத்தினூடாக 6 சதவீத வட்டி வீத உதவுதொகையில் வங்கிகளூடாக தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனத்தை வழங்குதல், திரவத்தன்மைப் பிரச்சனைகளைச் சமாளிக்கும் பொருட்டு பெருந்தோட்ட அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் தேயிலைத் தொழிற்சாலை நவீனமயப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட கடன்களின் மீளப்பெறுகையை ஒரு ஆண்டுக்கு இடைநிறுத்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. இத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த தேயிலையுடன் இலங்கைத் தேயிலையைக் கலப்பதைத் தவிர்க்கும் பொருட்டு இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு கிலோக்கிராம் தேயிலைக்கும் ரூ.4 கொண்ட செஸ்வரியை நிர்ணயித்தல், தேயிலை உறைகள் மற்றும் பொதிகளின் இறக்குமதிக்கு செஸ்வரியிலிருந்து விலக்களித்தல், திறைசேரி உத்தரவாதத்தின் மீது இலங்கையின் நட்பு நாடுகளிலுள்ள தேயிலை இறக்குமதியாளர்களுக்கு குறுகிய தவணைக் கடனில் தேயிலையை ஏற்றுமதி செய்தல் போன்ற நடவடிக்கைகள் கைத்தொழிலின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**தேயிலைத் துறையின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும் இவ்வாண்டில் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தாலும் இலங்கைத் தேயிலைச் சபையாலும் பல உபாயங்களும் விரிவாக்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.** வலுச் சேமிப்பு முறைகளின் அபிவிருத்தியுடன் இணங்கிச் செல்லும் வகையில் மின் செலவை காத்திரமான விதத்தில் குறைப்பதற்கு தேயிலைத் தொழிற்சாலைகளில் நிறுவுவதற்கு பொருத்தமான வலு வினைத்திறன் மிக்க மின்விசிறிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. வருமானத்தை அதிகரிப்பதற்கு பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளின் விருத்தியுடன் இணங்கிச் செல்லும் வகையில் சீன மற்றும் யப்பானிய பச்சைத் தேயிலையுடன் ஒப்பிடுகையில் இலங்கைப் பச்சைத் தேயிலையில் உள்ளடங்கியுள்ள காபோலிக் அமிலத்தின் உயர் அளவு தொடர்பான விசேட வலியுறுத்தலுடன் இலங்கை உடன் தேயிலை மற்றும் குடிப்பதற்கு தயார் நிலையிலுள்ள பச்சைத் தேயிலைப் பானங்களின் உற்பத்தி என்பன ஊக்குவிக்கப்பட்டன. இவ்வாண்டு காலப்பகுதியில் தேயிலைத் தொழிற்சாலை நவீனமாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 42 தேயிலை தெழிற்சாலைகள் அவற்றின் உற்பத்திகளுக்கு பெறுமதி கூட்டலை வழங்கும் தீங்கு விளைவிக்கின்ற பகுப்பாய்வு மட்டச் சான்றிதழைப் பெற்றன. இதேவேளை, தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை தேயிலை சிறு உடமையாளரின் அபிவிருத்திக்கான உபாயமாக காணி அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியதுடன் 1,128 எக்டேயர் நிலத்தைத் தயார்படுத்தலையும், 1,091 எக்டேயர் நிலத்தை வளப்படுத்தலையும், 881 எக்டேயரில் தேயிலை மீள்நடுகையையும் பூர்த்தி செய்தது.

## அட்டவணை 2.3 முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகை | அலகு | 2007(அ) | 2008(ஆ) |
|---|---|---|---|
| 1. தேயிலை | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 305.2 | 317.7 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | "000 எக்டேயர்கள | 222 | 222 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | "000 எக்டேயர்கள | 193 | 193 |
| 1.4 உற்பததிச் செலவுகள் (ஈ) | ரூபா/கி.கி | 236.50 | 262.60 |
| 1.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 279.10 | 301.63 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 364.28 | 430.40 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,452 | 1,389 |
| 1.7 புதிய பயிரிடுகை (உ) | எக்டேயர்கள் | - | - |
| 1.8 மொ.உ.உ. இன் வீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (ஊ) | | 1.6 | 1.6 |
| 2. இறப்பர் | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 117.6 | 129.2 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு (எ) | '000 எக்டேயர்கள் | 120 | 122 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (எ) | '000 எக்டேயர்கள் | 94 | 96 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 112.69 | 114.00 |
| 2.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 234.22 | 269.51 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 234.48 | 278.20 |
| 2.6 மீள்நடுகை (ஏ) | எக்டேயர்கள் | 5,192 | 1,818 |
| 2.7 புதிய பயிரிடுகை (ஏ) | எக்டேயர்கள் | 2,034 | 2,130 |
| 2.8 மொ.உ.உ.வின வீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (ஊ) | | 0.7 | 0.8 |
| 3. தெங்கு | | | |
| 3.1 உற்பத்தி | மில் காய்கள் | 2,869 | 2,909 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 395 | 400 |
| 3.3 உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 10.25 | 12.47 |
| 3.4 சராசரி விலை | | | |
| - உற்பத்தியாளர் விலை | காய்க்கு ரூபா | 16.87 | 22.71 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (ஐ) | காய்க்கு ரூபா | 16.50 | 21.41 |
| 3.5 மீள்நடுகை /கீழ்பயிரிடுகை (ஒ) | எக்டேயர்கள் | 2,528 | 1,712 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஒ) | எக்டேயர்கள் | 2,936 | 3,441 |
| 3.7 மொஉ.உ.வின் வீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (ஊ) | | 1.4 | 1.8 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குபவரின் இலாபம் உட்பட
(உ) 2007லிருந்து மேலாண்மைகளிலிருந்தான தனி உதவி தொகையின் கீழ புதிய பயிரிடுகை மேற்கொள்ளப்படவில்லை.
(ஊ) வளர்த்தல் மற்றும் பதனிடல் மட்டும்
(எ) தொகை மதிபபுப் புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2003இல் நடாத்தப்பட்ட இறப்பரின் நிலப்பரப்பு அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது.
(ஏ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்செய்கைஉதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(ஐ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்
(ஒ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.

மூலங்கள் : இலங்கைத் தேயிலைச்சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்டக் கம்பனிகள்
இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

**2008இல் இறப்பர் உற்பத்தி 10 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்து 129 மில்லியன் கிலோம் கிறாம்களை அடைந்தது.** இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய பாரிய மழைவீழ்ச்சியால் உற்பத்தி தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட போதிலும், அதிகரித்துச் செல்லும் செயற்கை இறப்பர் விலைகள் மற்றும் இக் காலப்பகுதியில் இயற்கை இறப்பருக்கான அசாதாரண உயர் விலைகள் பெறப்பட்டமையாலும் இயற்கை இறப்பருக்கான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியில் இறப்பர் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்தது. இதன்படி, 2008 யூனில் நெளிந்த புகையூட்டப்பட்ட தட்டை (ஆர்எஸ்எஸ்) இறப்பரின் விலை கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.350 ஆக விளங்கியதுடன், இது கொழும்பு இறப்பர் ஏலத்தில் முன்னெப்போதும் பதிவு செய்யப்படாத அதியுயர் விலையாகும். உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் வீழ்ச்சியடைந்து வரும் எண்ணெய் விலைகள் காரணமாக இறப்பருக்கான உலகக் கேள்வி குறைவடைந்து வருவதன் மத்தியில் இயற்கை இறப்பருக்கான கேள்வி வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளதால் இறப்பர் விலைகள் இரண்டாம் அரைப்பகுதியில் வீழ்ச்சியடையத் தொடங்கியதுடன் எண்ணெய் விலைகளின் வீழ்ச்சி செயற்கை இறப்பருக்கான கேள்வியை நோக்கிய நகர்வுக்கும் இட்டுச் சென்றது. இதன் விளைவாக இவ்வாண்டின் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடும் போது முறையே 33 சதவீதத்தாலும் 34 சதவீதத்தாலும் ஆர்எஸ்எஸ் 1 மற்றும் 2 இன் அதிகரித்த சராசரி விலைகள் இரண்டாம் அரைப்பகுதியில் மாற்றமடைந்து, இவ்விரு வகைகளிலும் 19 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்து கைத்தொழிலின் குறுகிய முதல் நடுத்தர கால நீடித்து நிலைத்திருக்கும் தன்மையை அச்சுறுத்தியது.

**2008 திசெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார தூண்டல் பொதியைத் தொடர்ந்து வரவு செலவுத்திட்டம் 2009 ஊடாக இறப்பர் கைத்தொழிலைப் புதுப்பிப்பதற்கான ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு அரசு பல வழிமுறைகளை மேற்கொண்டது.** இவை, இறப்பர் பொருட்களைத் தயாரிப்போர், வளர்ப்பவரிடமிருந்து லேற்றேக்ஸ் இறப்பரை கிலோக்கிறாம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது ரூ.150 வீதம் கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்துவதற்கு உதவுதொகைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல், இறக்குமதி செய்யப்பட்ட லேற்றெக்ஸ் இறப்பர் மற்றும் ஏனைய இறப்பர் பொருட்கள் மீதான செஸ் வரியை கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.25 இற்கு அதிகரித்தல், உள்நாட்டு லேற்றெக்ஸ் இறப்பருக்கான கேள்வியை அதிகரிப்பதற்கு இறக்குமதி செய்யப்பட்ட செயற்கை இறப்பர் மீதான செஸ்வரியை ரூ.35 இற்கு அதிகரித்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. இத்துடன், உள்நாட்டு இறப்பர் தயாரிப்புக் கைத்தொழில்களிலிருந்து சேகரிக்கப்பட்ட ஏற்றுமதி செஸ்வரியை ஒரு வருடத்திற்கு இடைநிறுத்தல், உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு மின் கட்டணம் மீதான 15 சதவீத மிகைக் கட்டணத்தை இடைநிறுத்தல் மற்றும் லீற்றர் ஒன்றுக்கான உலை எண்ணெய்யின் விலையை ரூ.10 ஆல் குறைத்தல், தற்போது இறக்குமதி செய்யப்படும் பேரூந்துகள் மற்றும் ஏனைய ஊர்திகளுக்கான டயர்களின் தயாரிப்பை ஊக்கப்படுத்துவதற்கு உற்பத்திச் செலவினைக் குறைத்தல் மற்றும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு நிதியியல் உதவியை வழங்கல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

**தர மேம்பாடுகளுடன் இயற்கை இறப்பருக்கான பன்னாட்டுச் சந்தைகளினுள் நுழைவதற்கு இறப்பர்க் கைத்தொழிலுக்கு உற்பத்தித் திறனில் மேலதிக மேம்பாடுகள் தேவைப்படுகின்றன.** இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு 2008இல் பல நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இத் திணைக்களம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் உதவியுடன் மொனராகலை மாவட்டத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்துவதற்கான சிறப்புச் செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. மேலும், இவ்வாண்டில் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவியுடன் கைத்தொழிலில் தேர்ச்சியுற்ற பால் எடுப்பவர்கள்

மற்றும் முளை ஒட்டுபவர்களின் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்வதற்காக களுத்துறை மற்றும் கேகாலை மாவட்டங்களில் 2,640 பால் எடுப்பவர்கள் பயிற்றுவிக்கப்பட்டதுடன், மேலும் களுத்துறை மாவட்டத்தில் 30 முளை ஒட்டுபவர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர். இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் இறப்பர் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக பல்வேறு கண்டுபிடிப்புக்களை நோக்கி முன்னேறியிருந்தது. இது 6 ஆண்டு முதிர்ச்சியற்ற காலப்பகுதியொன்றுக்கான நைதரசன் வளமாக்கியின் தேவைப்பாட்டில் 50 சதவீதத்திற்கு பதிலீடாக அமையும் "முகுண பிறக்ரீரா" என்ற தரையை மூடியிருக்கும் பயிரொன்றின் வளர்ப்பை விதந்துரைத்ததுடன் இதன் மூலம் 1 ஏக்கர் இறப்பர் காணிக்கான நைதரசன் வளமாக்கிச் செலவை ரூ.31,300ஆல் குறைக்க முடிவதுடன் 6 ஆண்டு முதிர்ச்சிக் காலப்பகுதியில் 1 எக்டேயர் இறப்பர் காணிக்கு 2,500 மெற்றிக்தொன் வைக்கோலைப் பயன்படுத்துவதன் மூலம் 1 எக்டேயர் இறப்பர் காணிக்கான பொற்றாசியம் வளமாக்கிச் செலவையும் ரூ.31,700ஆல் குறைக்க முடியும்.

**சாதகமான காலநிலை நிலைமைகளால் நன்மையடைந்து இவ்வாண்டில் இரண்டாம் அரைப்பகுதியில் மேம்பாடடைந்த செயலாற்றம் காரணமாக 2008இல் தெங்கு உற்பத்தி 2,909 மில்லியன் காய்களுக்கு 1.4 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைக் காட்டியது.** தெளிவாகத் தெரியும் விதத்தில் இவ்வாண்டின் முதலரைப்பகுதியிலான தெங்கு உற்பத்தி 2007இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 19.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 2007இல் நிலவிய கடுமையான வரட்சி மற்றும் தென் மாகாணத்தில் தோற்றம் பெற்று வந்த "வெலிகம தென்னை ஓலை வாடும் நோய்" என்ற பெயருடைய புதிய தெங்கு நோய் இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் உற்பத்தியின் வீழ்ச்சிக்குப் பெருமளவு காரணமாக விளங்கியது. எனினும், இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உற்பத்தி தொடர்ச்சியான அதிகரிப்பைக் காட்டியதுடன் முன்னைய ஆண்டின் ஒத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**கொழும்பு ஏலத்தில் தேங்காய், தேங்காய் எண்ணெய் மற்றும் தேங்காய்த் துருவல் உள்ளிட்ட தெங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் விலைகள் 2008இன் முதலரைப்பகுதியில் கணிசமானளவில் அதிகரித்த போதிலும் இரண்டாம் அரைப்பகுதியில் வீழ்ச்சியடையத் தொடங்கின.** இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் தெங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் உயர் விலைக்கு வழங்கல் பற்றாக்குறையுடனான உயர்ந்த உள்நாட்டுக் கேள்வி, பன்னாட்டுச் சந்தைகளின் வழங்கல் பற்றாக்குறை, உயிரின எரிபொருள் உற்பத்திக்காக தேங்காய் எண்ணெய்க்கான உலகக் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பவற்றின் இணைந்த விளைவாக ஏற்பட்டது. எனினும், அதிகரித்த உற்பத்தி மற்றும் பெற்றோலிய விலைகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உயிரின எரிபொருளுக்கான குறைந்த கேள்வி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தாவர எண்ணெய்யின் தீர்வை அமைப்பில் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் என்பன இவ்வாண்டிறுதியில் தெங்கு மற்றும் தெங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் விலைகளின் வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன.

**தெங்குக் கைத்தொழிலின் செயலாற்றத்தை மேம்படுத்துவதற்கு அரசு பல வழிமுறைகளை எடுத்தது.** தெங்கு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் ஏற்றுமதிக்கான தெங்கை அடிப்படையாகக் கொண்ட உயர் பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளின் தயாரிப்பை ஊக்குவிப்பதற்கும் 2008 யூலையிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தாவர எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய்யின் இறக்குமதி மீது வழங்கப்பட்ட தீர்வைச் சலுகை 23 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் 2008 திசெம்பரில் இருந்து தாவர எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய்க்கான சுங்க வரியினை 28 சதவிதமாக்கியதன் மூலம் தாவர எண்ணெய்க்கான தீர்வை விலக்கு நீக்கப்பட்டது.

**தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் உற்பத்தித்திறன், பயிர் பாதுகாப்பு மற்றும் தெங்கை அடிப்படையாகக் கொண்ட புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் என்பவற்றை மேம்படுத்துவதற்கு அதன் ஆராய்ச்சிச் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டது.** தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆய்வு, வீட்டுத் தோட்டங்கள் மற்றும் சிறு உடமையாளர்களுக்கான காணியின் அளவுக்கும் உற்பத்தித்திறனுக்குமிடையே கணிசமான எதிர்க்கணியத் தொடர்பு இருப்பதைத் எடுத்துக்காட்டியது. மேலும், இவ் ஆய்வு, காணியின் அளவு 21 ஏக்கர்களிலிருந்து 40 ஏக்கர் வரை அதிகரித்துச் செல்கையில் தெங்குத் தோட்டங்களின் உற்பத்தித்திறனும் அதிகரிக்கின்றது என்பதையும் தெரியப்படுத்தியது. இவ்வாண்டில் இந்நிறுவனம் 3 கிலோமீற்றர் அகலமும் 240 கிலோமீற்றர் நீளமான காலியிலிருந்து தங்காலை வரையான வீதி வழியே நோயற்ற எல்லைப் பிரதேசமாக வரையறுத்ததன் மூலமும் நோயினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து தேங்காய், ஏனைய தாவர விதைகள் அவற்றின் உடன் பகுதிகளைக் கொண்டு செய்வதற்குத் தடை விதித்ததன் மூலம் 'வெலிகம வாடல்' என அறியப்பட்ட வெலிகம தென்னோலை வாடல் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கும் பங்களிப்புச் செய்தது. மேலும், சிஆர்ஐஎஸ்எல் - 98 மற்றும் கப்புறுவன விதைகள் போன்ற புதிதாக மேம்படுத்தப்பட்ட உண்மையான கலப்பு விதைகள் இந்நிறுவனத்தால் தென்னை பயிரிடுவோருக்கு இவ்வாண்டில் வழங்கப்பட்டது.


**கறுவா, கராம்பு மற்றும் மிளகு போன்ற ஏனைய வேளாண்மை ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி 2008இல் கலப்பான செயலாற்றத்தைக் காட்டியது.** கொக்கோவின் உற்பத்தி 87 சதவீதத்தாலும், கராம்பு 169 சதவீதத்தாலும், பாக்கு 14 சதவீதத்தாலும், கோப்பி 2 சதவீதத்தாலும் அதிகரித்தது. இவ்வாண்டில், வெற்றிலை உற்பத்தி 7 சதவீதத்தாலும், ஏலக்காய் 21 சதவீதத்தாலும், மிளகு 21 சதவீதத்தாலும் கறுவா 3.5 சதவீதத்தாலும், முந்திரிப் பருப்பு 57 சதவீதத்தாலும், வீழ்ச்சியடைந்தது. கறுவா உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு குறிப்பாக, இலங்கைக் கறுவாவில் 40 சதவீத கொள்வனவுகளை தனித்துக் கொள்வனவு செய்யும் மெக்சிக்கோ மற்றும் ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகளின் மீது ஏற்பட்ட உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் கடுமையான தாக்கத்தின் காரணமாக உலகக் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாயமைந்தது. இதனால், இவ்வாண்டின் மூன்றாம் காலாண்டில் கறுவாவின் விலைகள் கிலோக்கிறாம் ஒன்றுக்கு 30 இலிருந்து 40 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்தன. குறைவடைந்த ஏற்றுமதிக் கேள்விக்குப்

புறம்பாக மிளகின் உற்பத்தியிலான வீழ்ச்சி கண்டி, மாத்தளை போன்ற மிளகு பயிரிடும் முக்கிய பிரதேசங்களில் நிலவிய பலத்த, தொடர்ச்சியான மழையால் பாதிப்படைந்தது. இந்தியா இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையிலிருந்தான மிளகு இறக்குமதி மீது இந்தியாவால் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையும் மிளகு ஏற்றுமதியில் வீழ்ச்சியை ஏற்படுத்தி அதன் மூலம் மிளகு உற்பத்தியைக் குறைக்கிறது. இருப்பினும், கராம்பு உற்பத்தி நான்கு வருடங்களுக்கு ஒரு முறை உச்ச விளைச்சலைக் கொடுப்பதுடன் அதன் உச்ச விளைச்சல் 2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட காரணத்தால், 2008இல் கடைசியாக கராம்பு உற்பத்தி தனிச் சிறப்பு வாய்ந்த செயலாற்றத்தைக் காட்டியது. கறுவா உற்பத்தியாளர்களால் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசால் திசெம்பர் 2008இல் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார தூண்டல் பொதியினூடாக பல வழிமுறைகள் அறிவிக்கப்பட்டன. இவை, பயிரிடுவோரின் தொழிற்பாட்டு மூலதனத் தேவைக்காக சலுகை வீதங்களில் கடன்களை வழங்கல், கறுவா பயிரிடுவோரிடமிருந்து உத்தரவாதமளிக்கப்பட்ட விலைகளில் கறுவாவைக் கொள்வனவு செய்யும் கறுவா ஏற்றுமதியாளர்களுக்கு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கீழ் சிறப்பு உதவுதொகையை அறிமுகப்படுத்தல் என்பனவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

### உள்நாட்டு வேளாண்மை

**2008இல் நெல் உற்பத்தி 3.87 மில்லியன் மெற்றிக் தொன்கள் கொண்ட சாதனை மட்டத்திற்கு 24 சதவீதத்தால் அதிகரித்ததுடன் இது 2.63 மில்லியன் மெற்றிக் தொன் அரிசிக்குச் சமனானதாகும்.** இருப்பினும் பெரும்போகம் 2007/2008 இல் நெல் உற்பத்தி, முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2.125 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 7.8 சதவீதத்தால் மட்டும் அதிகரித்த போதிலும் 2008 சிறுபோகத்தில் நெல் உற்பத்தி 1.75 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 51 சதவீதம் கொண்ட வழமைக்கு மாறான வளர்ச்சியைக் காட்டியதுடன் இது சுதந்திரத்துக்குப் பின்பு எந்தவொரு பருவ காலத்திற்குமான இரண்டாவது அதியுயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது. இவ் அதிகரிப்பு வழமையில் சார்பு ரீதியாக குறைந்த உற்பத்தியைப் பதிவு செய்யும் சிறுபோகத்தில் பதிவு செய்யப்பட்டதால் தனிச் சிறப்பானதாகும். இவ் அதிகரிப்பு உற்பத்தியாளர்களிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும் அரசின் ஆகக் குறைந்த விலை, முன்னைய ஆகக் குறைந்த விலை மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 24 சதவீதத்தால் அதிகரித்தமையால் கிடைத்த நன்மைகளின் காரணமாக முன்னைய சிறுபோகத்துடன் ஒப்பிடுகையில் பயிர் செய்யப்பட்ட பிரதேசத்தில் ஏற்பட்ட 62 சதவீத அதிகரிப்பால் பெருமளவு ஏற்பட்டதாகும். இந் நடவடிக்கை உலகின் உயர் வளமாக்கி விலைகளுக்கு மத்தியில் அரசின் வளமாக்கி உதவுதொகை தொடர்ந்தமை மற்றும் அநேகமாக நாட்டின் சகல பகுதிகளிலும் 2008இல் பெய்த சிறந்த மழை போன்ற காரணிகளாலும் உதவப்பட்டது. அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பயிரிடப்பட்ட காணிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு சிறுபோகத்தில் மொத்த நெல் உற்பத்தியில் 23 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தமையும் இப் போக்குக்குக் காரணமாக அமைந்தது. 2008இன் முதலரைப்பகுதியில் உலக சந்தையில், குறிப்பாக, கோதுமை உள்ளிட்ட தானியங்களின் உயர் விலைகளும் அரிசி உற்பத்தியின் அதிகரிப்புக்குக் காரணமாக

**வரைபடம் 2.2 அரிசி: நிரம்பலும் கேள்வியும்**




விளங்கின. மேலும், அரசின் வேளாண்மை நிகழ்ச்சித்திட்டமான "நாம் பயிர் செய்வோம் நாட்டைக் கட்டி எழுப்புவோம்" உம் பயிர் செய்யப்பட்ட நிலத்தில் அளவிலான அதிகரிப்புக்குக் காரணமாக விளங்கி உற்பத்தியை அதிகரிக்கின்றது.

**2007 யூனிலிருந்து 2008 யூன் வரையான காலப்பகுதியில் சகல வகை அரிசிகளினதும் விலைகளில் பதிவு செய்யப்பட்ட கூர்மையான அதிகரிப்பு தனியார்துறை மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தியதுடன் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசின் விரைந்த தலையீட்டை வற்புறுத்தியது.** இதனைச் செய்யும் முகமாக, அரசு அரிசி இறக்குமதிகள் மீதான சுங்கத் தீர்வையைத் தளர்த்தியுடன் அரிசி விலைகளில் தேவையற்ற அதிகரிப்புக்களைத் தவிர்க்கும் ஒரு முயற்சியாக வெவ்வேறு தரத்திலான அரிசிகளுக்கு ஆகக்கூடிய சில்லறை மற்றும் மொத்த விற்பனை விலைகளை நிர்ணயித்தது.

**அரசின் நெல் கொள்வனவுத் திட்டம் 2008இல் தொடர்ந்து தொழிற்பட்டது.** இதன்படி, 2008 சிறுபோகத்தில் இலங்கை வேளாண்மை உற்பத்திகள் சந்தைப்படுத்தல் அதிகாரசபை நீண்ட நெல் விதைகளை (நாடு) கிலேக்கிறாமொன்றுக்கு ரூ.28 வீதமும், சிறிய நெல் விதைகளை (சம்பா) கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.30 வீதமும் கொள்வனவு செய்தது. அரசு 2008 சிறுபோகத்தில் 5,747 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு ரூ.172 மில்லியனைச் செலவழித்தது. இவ்வாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு 84,000 மெற்றிக் தொன்களாக விளங்கி 4.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**நெல் துறையில் புதிய தொழில்நுட்பத்துடன் சிறந்த வேளாண்மை நடைமுறைகளூடாக உற்பத்தியை அதிகரிப்பதற்கு வேளாண்மைத் திணைக்களத்தால் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் 2008இலும் தொடர்ந்தும் நடைமுறைக்கிடப்பட்டன.** இது தொடர்பாக, 2007/2008 பெரும் போகத்திலும் 2008 சிறு போகத்திலும் "ஜாய" உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம், "சறுகித ஜாய" நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கைவிடப்பட்ட நெற்காணிகளில் மீள் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெற்றன. 65,415 எக்டேயர்களை உள்ளடக்கும் 75,618 வேளாண்மையாளர்களுடனான மொத்தம் 4,008 ஜாய உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சுழலும் நிதியங்களுடனான 560 புதிய சறுகித ஜாய நிகழ்ச்சித்திட்டங்களும் 2008இல் தொழிற்படுத்தப்பட்டன. 2008/2009 பெரும்போகத்தில்

அட்டவணை 2.4

## நெல்துறை மீதான புள்ளிவிபரங்கள்

| விடயம் | அலகு | 2007(அ) | | | 2008(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 525 | 291 | 816 | 582 | 471 | 1,053 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 512 | 284 | 796 | 568 | 465 | 1033 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள | 459 | 255 | 714 | 508 | 417 | 925 |
| உற்பத்தி | '000 மெ.தொ. | 1,973 | 1,158 | 3,131 | 2,125 | 1,750 | 3,875 |
| | '000 புசல்கள் | 94,546 | 55,491 | 150,038 | 101,830 | 83,860 | 185,690 |
| விளைச்சல் (இ) | கி.கி/ எக்டேயர்கள் | 4,299 | 4,543 | 4,389 | 4,175 | 4,195 | 4,184 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில்லியன | 559 | 471 | 1030 | 749 | 691 | 1,440 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொ. | - | - | 88 | - | - | 84 |
| இறக்குமதிகளின் நெல்லிற்குச்சமமான | '000 மெ.தொ. | - | - | 129 | - | - | 124 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதே வேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன்மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகின்றது.

**மூலங்கள்:** தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

கைவிடப்பட்டிருந்த 15,177 எக்டேயர் நெற்காணிகளில் மீளப் பயிர் செய்யப்பட்டது. 2007/2008 பெரும்போகத்திலும் 2008 சிறுபோகத்திலும் சான்றிதழ் அளிக்கப்பட்ட விதை நெல் உற்பத்தி நிகழ்சித் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 4,513, மற்றும் 4,156 எக்டேயரில் முறையே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. சுய நெல் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2007/2008 பெரும்போகத்தில் 116,491 புசலும் 2008 சிறுபோகத்தில் 57,464 புசலும் உற்பத்தி செய்யப்பட்டது.

**அரிசி உற்பத்தியின் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத்தை அதிகரிப்பதற்கு பல எண்ணிக்கையான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் நெல் துறையின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுகிறது.** அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனத்தால் விருத்தி செய்யப்பட்ட தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி உயர் தரமுள்ள அரிசியை உற்பத்தி செய்யும் கிராமிய வேளாண்மைத் துறையின் வருமானத்தை அதிகரிப்பதற்காக நாட்டில் அரிசி உற்பத்தி செய்யும் முக்கிய பிரதேசங்களிலுள்ள அரிசி பதனிடல் கிராமங்களை நிறுவுதல், 2008இலும் தொடர்ந்து நடைபெற்றது. இவ்வாண்டில் அதியுயர் விளைச்சலைப் பதிவு செய்த மாவட்டங்களில் 50 மாதிரி அரிசி பதனிடல் கிராமங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனமும் 2008இல் அரிசி ஆலை நவீனமயமாக்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதுடன் நாட்டின் வெவ்வேறான பகுதிகளில் 292 அரிசி ஆலையாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். இலங்கையில் அரிசி மா பதனிடல் கைத்தொழிலின் அபிவிருத்தி மற்றும் அரிசியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளைப் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந் நிறுவனத்தின் உதவியுடன் 2008இல் 70 புதிய அரிசி மா பதனிடல் நிலையங்கள் நிறுவப்பட்டதுடன் தற்போதுள்ள 65 பொறிகள் நவீனமயப்படுத்தப்பட்டன.

**பெலவத்தை மற்றும் செவனகல தொழிற்சாலைகள் இரண்டும் 2008இல் 37,988 மெற்றிக் தொன் சீனியை உற்பத்தி செய்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 29 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.** 2007இன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பு பயிர்ச்செய்கைக்கான நிலத்தைத் தயார்படுத்தியதன் மூலமும் வளமாக்கி மற்றும் தொழில்நுட்ப மதியுரையை வழங்குவதன் மூலமும் பயிரிடப்பட்ட பிரதேசத்தின் அளவையும் எக்டேயர் ஒன்றுக்கானவிளைச்சலையும் அதிகரிப்பதற்கு தொழிற்சாலைகளால் மேற்கொள்ளப்பட்ட உபாயத்தின் முக்கிய காரணத்தால் ஏற்பட்டது. எனினும், 2008இல் உற்பத்தி நாட்டின் வருடாந்த மொத்த சீனி நுகர்வில் கிட்டத்தட்ட 7 சதவீதத்தைப் பூர்த்தி செய்வதற்கு மட்டுமே போதுமானதாகும். 2015ஆம் ஆண்டளவில் நாட்டின் சீனித் தேவைப்பாட்டின் 50 சதவீதத்தை உற்பத்தி செய்யும் குறிக்கோளுடன் ககட்டகஸ்கிலிய, ஊவாவெலஸ மற்றும் பிபிலைப் பிரதேசங்களில் 90,000 ஏக்கரில் கரும்பைப் பயிரிடுவதற்கு தனியார் குழுக்களுக்குத் தேவையான காணியை வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதேவேளை, மின்வலுவை உற்பத்தி செய்வதற்கு கரும்பின் எச்சங்களைப் பயன்படுத்தியமை மேற்கூறப்பட்ட தொழிற்சாலைகளின் நிருவாகச் செலவைக் குறைக்க உதவியதுடன் கழிவு உயிரின வளமாக்கியைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.

**சீனி ஆராய்ச்சி நிறுவனம் புதிய இடைவெளி விடும் நடுகைத் தொழில்நுட்பத்தை விருத்தி செய்ததுடன் இதை உள்நாட்டு சீனிக் கம்பனிகளுக்கு விதந்துரைத்தது.** இப் புதிய நடுகைத் தொழில்நுட்பத்தைப் பின்பற்றுவதூடாக கரும்புச் செய்கையின் பயிரிடல் செலவில் கணிசமான அதாவது 70 சதவீதக் குறைப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டில், தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் நியம அளவிலான வர்த்தக வகைகளைவிட தரத்தில் உயர்ந்த உயர் விளைச்சலைக் கொண்ட வர்த்தக ரீதியிலான இரு வகைகளை சீனி ஆராய்ச்சி நிறுவனம் விருத்தி செய்தது.

### காடாக்கல்

**2008இல் காடாக்கல் திணைக்களம் அரசு, வெளிநாட்டுக் கொடை முகவர்கள் மற்றும் தனியார் துறையின் உதவியுடன் காடாக்கல் துறையை அபிவிருத்தி செய்வதற்கு பல செயற்றிட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டது.** இதன்படி, காடாக்கல் பராமரிப்பு, முகாமைத்துவம் மற்றும் மீள்காடாக்கலை

ஊக்குவிப்பதற்கு ஏனைய செயல் திட்டங்களுடன் காடு மூலவளங்கள் முகாமைத்துவச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி, 720 எக்டேயர் கொண்ட புதிய பிரதேசம் மீள்காடாக்கப்பட்டதுடன் 2,332 எக்டேயர் கொண்ட இளம் பெருந்தோட்டம் பேணப்பட்டிருக்கையில் இலக்கிடப்பட்ட 11,200 கிலோமீற்றர் காடு அளவீடு செய்யப்பட்டதுடன் எல்லையிடலும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. மேலும், திணைக்களம் சிங்கராஜா, நகல்ஸ், தெதியாகல, நாக்கியதெனிய மற்றும் கன்னெலிய போன்ற காடுகளில் மரம் தறித்தலைத் தடுத்ததன் மூலம் இயற்கைக் காடுகளைப் பாதுகாத்தல் தொடர்பான அதன் செயற்பாடுகளைப் பலப்படுத்தியது. இது 642 எக்டேயரிலும் 1,200 எக்டேயரிலும் முறையே மரதோப்புக்களை முகாமை செய்வதன் மூலமும் வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமும் சூழல் பாதுகாப்பில் சமூகத்தின் பங்கேற்புக்கு ஊக்கமளித்தது. இவ்வாண்டில் தனியாருக்குச் சொந்தமான வர்த்தக காடு பெருந்தோட்டங்களின் எண்ணிக்கையும் 524 எக்டேயர்களுக்கு 3 சதவீதத்தால் அதிகரித்தது.

### மீன்பிடி

**ஆண்டு மீன் உற்பத்தி 2008இல் முன்னெப்பொழுதுமில்லாத உச்சமட்டமான 319 மில்லியன் கிலோகிறாம்களை அடைந்து 10 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.** இவ் அதிகரிப்பில் கிட்டத்தட்ட 8.7 சதவீதம் ஆழ்கடற் துறையாலும் 15.9 சதவீதம் நன்மீன் மற்றும் அலங்கார மீன் உற்பத்தித் துறையாலும் பங்களிப்பு செய்யப்பட்டது. ஆழ்கடல் துணைத் துறையிலான குறிப்பிடத்தக்க வளர்ச்சி 6.6 சதவீத உயர்வுடன் கரைகடந்த/ஆழ்கடல் மீன் உற்பத்தியில் பதிவு செய்யப்பட்டதுடன் இது நீருக்கு அடியில் மீன்பிடிப்பது தொடர்பான தகவலை வழங்கியதன் மூலமும் கிழக்கில் மீன்பிடித் தொழிற்பாடுகள் அதிகரித்தமையாலும் ஏற்பட்டது. சாதகமான வானிலை நிலைமை அது போல் உள்நாட்டில் இடம் பெயர்ந்த இலங்கையர்களை மீளக் குடியமர்த்துவதன் காரணமாக கிழக்கில் மீன்பிடி அதிகரித்தமை என்பனவற்றின் காரணமாக கரையோர உற்பத்தி 10.1 சதவீதம் கொண்ட உயர் அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. நன்னீர் மீன்பிடி உற்பத்தி கிட்டத்தட்ட 23 சதவீத அதிகரிப்பைக் காட்டியிருக்கையில் சமூக பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டங்களுடன் கூடிய பருவகால நீர்த்தேக்க மீன் உற்பத்தி மூலம் நீர் நிலைகளின் உரிய முகாமைத்துவம் மற்றும் அதிகரித்துச் செல்லும் மீன் குஞ்சுகளின் இருப்பு என்பன காரணமாக 10.9 சதவீத அதிகரிப்பை அடைந்தது. இதேவேளை, பெரும்பாலும் வெள்ளைப் புள்ளி நோய் காரணமாக கூனி இறால் பண்ணைக் கைத்தொழில் உற்பத்தி 38 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. கிருமி பரவாமல் தடுப்பதற்கான குளோரின் மூலமான நீர் சுத்திகரிப்பின் உயர் பேணல் செலவு மற்றும் உயர் எரிபொருள் செலவும் இறால் பண்ணைக் கைத்தொழிலைப் பாதித்தது. அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகள் காரணமாக அதிகரித்துச் செல்லும் செலவின் விளைவாக முக்கியமாக மீன் வழங்கலில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக குறிப்பாக இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் மீனின் சந்தை விலைகள் கணிசமான அதிகரிப்பைக் காட்டின.

**மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட பல செயற்றிட்டங்கள் 2008இல் திருப்திகரமான முன்னேற்றத்தைக் காட்டின.** அம்பாந்தோட்டை, அம்பலாங்கொடை மற்றும் சிலாபத்திலுள்ள மூன்று புதிய மீன்பிடித் துறைமுகங்களின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டது. டிக்கோவிற்ற மீன்பிடித் துறைமுகம் தொடர்பாக காணிக் கொள்வனவு, காணியை உரிமையாக்கல் மற்றும் கொடை உடன்படிக்கையை கைச்சாத்திடல் போன்ற ஆரம்ப வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. இது பூர்த்தி செய்யப்பட்டதும் வெளிநாட்டுக் கலங்களுக்கு கூடிய நுழைவைக் கொடுக்கக் கூடிய ஆழ்கடல் மீன்பிடிக் கலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தரையிறக்க மற்றும் கரையின் அடிப்படை வசதிகளுடன் டிக்கோயாத் துறைமுகம் ஆகப் பெரிய முழு வசதியுடனான துறைமுகமாக விளங்கவுள்ளதுடன் பெருங்கடல் மீன் உற்பத்தியின் வளர்ச்சிக்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்துகிறது. பாலியகொடவிலுள்ள மீன் சந்தைக் கட்டடத் தொகுதியின் நிர்மாணம் இவ்வாண்டின் இறுதியில் ஆரம்பமானது. இப் புதிய சந்தைத் தொகுதி, நவீன தரங்களுடன் மீனின் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் பகிர்ந்தளிப்புக்கான போதிய வசதிகளுடன் நாள் ஒன்றுக்கு 500 மெற்றிக் தொன் மீனைக் கையாள்வதற்கு வசதிப்படுத்தும். இது மீன்பிடித்த பின்பு ஏற்படும் இழப்புக்களைக் குறைப்பதன் மூலம் உள்நாட்டுச் சந்தையில் மீனின் விலையைக் குறைக்கிறது. உறைநீர்க்கட்டிப் பொறிகள்மற்றும் மண் அணைச் செயற்றிட்டங்களின் கீழ் 10 மெற்றிக் தொன்கள் நாளாந்த உற்பத்தியுடன் 11 கொள்கலனில் வைக்கப்பட்ட உறைநீர்க்கட்டிப் பொறிகள் நிறுவப்பட்டதுடன் இவை 2008இல் உற்பத்தியை ஆரம்பித்தன. இத்துடன், 10 மெற்றிக் தொன்கள் இயலளவுடன் கொள்கலனில் வைக்கப்பட்ட 12 குளிர் அறைகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், பல நாள் படகுகளுக்காக உள்ளார்ந்த வளம்மிக்க மீன்பிடி வலயங்களை இனங் கண்டு இலக்கிடுவதற்கு செய்மதியை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல் முறைமையும் நடைமுறையில் இருந்தது.

**அட்டவணை 2.5 மீன் உற்பத்தி**

மெற்றிக் தொன்கள் '000

| துணைத்துறை | 2007(அ) | 2008(ஆ) |
|---|---|---|
| கடல் (இ) | 253 | 275 |
| பண்ணை மீன் வளர்ப்பும் நன்னீர் மீன்பிடியும் | 38 | 44 |
| மொத்தம் | 291 | 319 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறை

மூலம் : கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அமைச்சு

**வேளாண்மைத் துறையில் உற்பத்தியையும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு வரவு செலவுத்திட்டம் 2009 பல எண்ணிக்கையான வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.** எதிர்வரும் பெரும்போகத்தில் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை, குறிப்பிட்ட இறக்குமதிகள் மீது புதிய செஸ்வரியை அறிமுகப்படுத்தல் மற்றும் தற்போதைய செஸ்வரிகளை மாற்றல், நாடு முழுவதும் அரிசி மற்றும் ஏனைய தானியங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு கோதுமை மா மீதான 5 சதவீத செஸ்வரி மற்றும் ஏனைய வகை இறக்குமதி செய்யப்பட்ட தானியங்கள் மீதான 15 சதவீத செஸ்வரியையும் உள்ளடக்குகிறது. இறக்குமதி செய்யப்பட்ட சோளம் மீது 25 சதவீத செஸ்வரியை விதித்தமை உள்ளூரில் சோளம் உற்பத்தி செய்யும் வேளாண்மையாளர்களை

ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. கோதுமைத் தானியம் மீதான இறக்குமதித் தீர்வையை 10 சதவீதத்திற்கு அதிகரித்தமையும் அரிசி மற்றும் ஏனைய தானியங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு இலக்கிடப்பட்டுள்ளது. உருளைக்கிழங்கு மீதான சிறப்புப் பண்டத் தீர்வை உள்நாட்டு உருளைக்கிழங்கு வேளாண்மையாளர்களை ஊக்குவிப்பதற்கு கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.15 இலிருந்து ரூ.20 இற்கு அதிகரிக்கப்பட்டது. 2010 அளவில் உள்நாட்டுத் தேவையையும் ஏற்றுமதிக் கேள்வியையும் பூர்த்தி செய்வதற்கு பழங்களின் உற்பத்தியின் தற்போதைய அளவை 1 மில்லியன் தொன்னுக்கு அதிகரிப்பதற்கான அரசின் திட்டத்துடன் இணங்கிச் செல்லும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட சகல பழங்கள் மீதான தற்போதைய செஸ்வரி வீதங்கள் கணிசமானளவு உயர் வீதங்களால் அதிகரிக்கப்பட்டன.

**நாட்டின் வேளாண்மை மறுமலர்ச்சியை ஊக்குவிப்பதற்கு 2008இல் அரசாங்கத்தால் வளமாக்கி உதவுதொகைத் திட்டம் அரசால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.** வளமாக்கியின் விலை சர்வதேச ரீதியாக இவ்வாண்டில் 50 கிலோக்கிறாம் மூடை ஒன்று ரூ.6,000 இற்கு அதிகரிக்கப்பட்ட போதிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. நெல் பயிர்ச்செய்கைக்கான வளமாக்கியின் சகல வகைகளும் 50 கிலோக்கிறாம் மூடை ஒன்று ரூ.350 இற்குக் கிடைக்கத்தக்கதாக இருக்கையில் 5 ஏக்கர்களுக்குக் குறைவான தேயிலை, இறப்பர் காணிகளை வைத்திருக்கும் சிறு உடமையாளர்களுக்கு 50 கிலோகிறாம் யூரியா மூடை ஒன்று ரூ.1,200 வீதம் வழங்கப்பட்டது. 2008இல் வளமாக்கி உதவுதொகையின் பெறுமதி ரூ.26 பில்லியனாக விளங்கியது. வரவு செலவுத்திட்டம் 2009 சேதனப் பசளை மற்றும் வைக்கோல் போன்ற பொருட்களைப் பயன்படுத்தும் வேளாண்மையாளர்களுக்கு வளமாக்கியை வழங்குவதற்கு நிதியங்களை ஒதுக்கீடு செய்ததுடன் வேளாண்மையாளர்கள் அவர்களது பயிர்செய்கைக்காகப் பெறப்பட்ட வளமாக்கியின் மீள்கொடுப்பனவு அரசுக்கு ஒருபக்க நெல்லைக் கையளிப்பது என்ற நிபந்தனையில் வேளாண்மையாளர் சங்கங்களால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் கீழ் ஏக்கர் ஒன்றுக்கு 3 மூடை (50கி.கி) வளமாக்கி வழங்கப்பட்டது. இது நெல்லுக்கு வளமாக்கி தேவைப்பட்ட போதிலும் நிதியியல் நெருக்கடிகள் காரணமாக வளமாக்கியைக் கொள்வனவு செய்ய இயலாத வேளாண்மையாளரை இம்முறைமை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

**2007இல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய வேளாண்மை கொள்கையுடன் இணைந்து செல்லும் விதத்தில் வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்தை உறுதிப்படுத்துவதற்கும், வேளாண்மைக்கான முன்னேற்றமடைந்த தொழில்நுட்பங்களைப் பிரபல்யமாக்குவதற்கும், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சு 2008இல் பல வழிமுறைகளை எடுத்தது.** மேற்கூறிய நோக்கங்களுக்காக, 2003ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க விதைகள் சட்டத்தின் கீழ் 2008இல் தேசிய விதைச் சபை நிறுவப்பட்டதுடன் வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிப்பதற்காக "கிராமத்திலிருந்து கிராமத்துக்கு" மற்றும் "வீட்டிலிருந்து வீட்டிற்கு" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருக்கையில் ஈர வலயங்களில் பயிர் செய்யப்படாத நெல் காணிகளில் பயிர் செய்வதற்காக சிறப்புச் செயற்றிட்டங்கள் மற்றும் உற்பத்தியை ஊக்குவிக்கும் மற்றும் சேதன வளமாக்கியின் பயன்படுத்தும் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பயிர்ச்செய்கைக்கு தெரிந்தெடுக்கப்பட்ட அமைவிடங்களிலுள்ள மண்ணைப் பாதுகாப்பதற்கான செயற்றிட்டமும் கமத்தொழில் திணைக்களத்தின் கீழ் நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

**இவ்வாண்டில் தோட்டக்கலைத் துறையில் பல கலப்பு இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.** இந்நோக்கத்துக்காக கமத்தொழில் திணைக்களம் பல எண்ணிக்கையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், விரிவாக்கப் பணிகள், விதை உற்பத்தி மற்றும் தரமேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. தோட்டக்கலைப் பயிர்த்துறையின் தரத்தையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்தும் நோக்கத்திற்காக "பாத்தியா" மற்றும் "மகேசி" என்ற தக்காளியின் இரு கலப்பு வகைகளையம் உயர் விளைச்சலைக் கொண்ட உயர் வெப்பநிலைச் சூழலுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய வகையொன்றையும் வழங்கியது. ஏனைய களப்பயிர்த் துறையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு எக்டேயர் ஒன்றுக்கு 12 - 15 தொன் உள்ளார்ந்த வளம் மிக்க விளைச்சலைக் கொண்ட பச்சை மிளகாய் மற்றும் செத்தல் மிளகாய் உற்பத்திக்கு உகந்த உயர் விளைச்சலுள்ள மிளகாய் இனத்தையும், எக்டேயர் ஒன்றுக்கு 3 தொன் விளைச்சலுள்ள பச்சை மிளகாய் மற்றும் செத்தல் மிளகாய் இனத்தையும் வெளியிட்டது. குறுகிய கால (65 - 70 நாட்கள்) உழுந்து வகையான 'அனுராதா' உம் பொதுப் பயிர்ச்செய்கைக்காக வெளியிடப்பட்டது.

**பாற்பண்ணை மற்றும் கோழிப் பண்ணைக் கைத்தொழில்களை முக்கியமாகக் கொண்டுள்ள கால்நடைத்துறை இவ்வாண்டில் மிதமான செயலாற்றத்தைப் பதிவு செய்தது.** 2008இல் மொத்த சுத்தமான பசுப்பால் 172.4 மில்லியன் லீற்றர்களுக்கு 1.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இதில் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.9 மில்லியன் லீற்றர்களுக்கு 1.8 மில்லியனிலிருந்து குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இம்மேம்பாடு நாடு பாலில் சுயதேவையைப் பூர்த்தி அடைவதனைக் குறிக்கோளாகக் கொண்ட தற்போதைய கொள்கைக் கட்டமைப்பின் கீழ் தேசிய பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக அரசின் விடா முயற்சியுடன் இணங்கிச் செல்லும் வகையில் சிறந்த முகாமை நடைமுறைகளாலும் உயர்தர விலங்குகளைக் கொள்வனவு செய்ததன் மூலமும் அடையப்பட்டது. இத்துடன், இவ்வாண்டில், தனியார்துறையுடன் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைப் பண்ணைகளில் இணைந்த துணிகர நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கையில் பொலனறுவையிலுள்ள இன்ரநசனல் டெயறி புறொடக்ஸ் லிமிடெட், மில்கோ நிறுவனத்தால் பொறுப்பேற்கப்பட்டது. பால் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு, 2008 வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத்திற்கு முரணான பசுவதை மற்றும் அவற்றைக் கொண்டு செல்வதற்கான தண்டப் பணம் ரூ.50,000 வரை அதிகரிக்கப்பட்டது. உண்மையில், வரவு செலவுத்திட்டம் 2009 இறக்குமதி செய்யப்பட்ட பால் மா மீதான சிறப்புப் பண்ட வரி விதிப்பை கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.5 இலிருந்து ரூ.15

**அட்டவணை 2.6 கால்நடை வளர்ப்புத்துறை புள்ளி விபரங்கள்**

| துணைத்துறை | 2007(அ) | 2008(ஆ) |
|---|---|---|
| 1. தேசிய விலங்குத் தொகுதி(எண்ணிக்கை) (மில்) | 1.5 | 1.5 |
| கறவைப் பசுக்கள் | 1.2 | 1.2 |
| எருமைகள் | 0.3 | 0.3 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 202.0 | 208.1 |
| பசும்பால் | 169.7 | 172.4 |
| எருமைப்பால் | 32.3 | 35.7 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) | 12.1 | 13.5 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ/லீற்றர்) | 21.00 | 29.53 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 915.6 | 1039.8 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 100.1 | 101.5 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : வேளாண்மை கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சு

வரை அதிகரிப்பதற்கு முன்மொழிந்ததுடன் பாற் பண்ணையாளரை ஊக்குவிக்கும் நோக்கில் கிராம மட்டத்தில் கறவைப் பசுக்களை இறைச்சிக்காக வெட்டுவதை ஒழிப்பதற்கு அர்ப்பண நிறுவனங்களுக்கு உதவுவதற்கு நிதியங்களை ஒதுக்கீடு செய்தது. இச் சகல முன்னெடுப்புக்களுக்கு மத்தியிலும் மொத்த பால் உற்பத்தி தற்போதும் கூட நாளொன்றுக்கான தலைக்குரிய நுகர்வுக்கான தேசிய பால் தேவைப்பாடான 110 மில்லி லீற்றரின் 26 சதவீதத்திற்கு மட்டுமே போதுமானதாக இருக்கிறது. இந்நிலைமை முன்னுரிமை அடிப்படையில் உள்நாட்டு பால் உற்பத்தியை நோக்கி மூலவளங்கள் திருப்பப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. மேலும், இவ்வாண்டில் உற்பத்தியாளர்களுக்குச் செலுத்தப்பட்ட விலை லீற்றர் ஒன்றுக்கு ரூ.29.50 இற்கு 40 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டமை பாலை பால் சேகரிக்கும் நிலையங்களுக்குக் கொண்டு வருவதற்கு உள்நாட்டுப் பண்ணையாளரை ஊக்கப்படுத்தியது.

**2008இல் விலங்கு உற்பத்தி மற்றும் நலத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கையில் பாற்பண்ணைத் துறையின் அபிவிருத்தி தொடர்பான அரசின் கொள்கையுடன் இணங்கியிருந்தன.** நாட்டில் கால்நடைகளின் குடித்தொகையை குறிக்கோளாகக் கொண்ட கால்நடை (பாற்பண்ணை) உற்பத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ், செயற்கையாக கருத்தரிக்கச் செய்யும் நிலையங்களைப் பலப்படுத்தி பேணுதல், செயற்கையாக கருத்தரிக்கச் செய்யும் பணியை நடைமுறைப்படுத்தல், இயற்கையான இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மேய்ச்சல் புல்வெளியை விருத்தி செய்தல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன. கன்னிப் பசு கன்றுகளை வளர்க்கும் செயற்றிட்டத்தின் கீழ் 8,778 மேம்படுத்தப்பட்ட பசுக்கள் பண்ணையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. இத்துடன், கால்நடைப் பண்ணைச் சமுதாயத்திற்கு நிறுவன ரீதியான உதவியை உறுதிப்படுத்தும் பொருட்டு அம்பாந்தோட்டை, கேகாலை, மாத்தளை, நுவரேலியா, அம்பாறை, திருகோணமலை மற்றும் ஹோமாகமவில் புதிய மிருக வைத்திய பரீட்சிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன.

**2008இல் கோழி இறைச்சி உற்பத்தி 101,500 மெற்றிக் தொன்களுக்கு 1.4 சதவீதம் கொண்ட சிறு அதிகரிப்பைப் பதிவு செய்தது.** இது பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூர் விலங்குத்தீன் கூறுகளின் அதிகரித்த விலைகளின் காரணமாக கடந்த ஆண்டின் கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.172 - 190 உடன் ஒப்பிடுகையில் ரூ.197 - 225 வீச்சினுள் அதிகரித்த உற்பத்திச் செலவு காரணமாக ஏற்பட்ட குறைந்த கேள்வியால் ஏற்பட்டது. அதிகரித்த உற்பத்திச் செலவுக்கு மத்தியிலும், 2008இல் முட்டை உற்பத்தி 14 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தது. இது அதிகரித்துச் செல்லும் கோழி இறைச்சி விலைகளின் மத்தியில் முட்டைக்கான அதிகரித்த கேள்வியால் ஏற்பட்டது.

**இவ்வாண்டில் இலங்கை "பறவைக் காய்ச்சல்" நோய் பரவுவதிலிருந்து கூடியளவு விடுபட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக விலங்கு உற்பத்தி மற்றும் நலத் திணைக்களத்தால் பல எண்ணிக்கையான கொள்கைத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.** பறவைக்காய்ச்சலுக்கு எதிராக இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய விழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் இலங்கையில் பறவைக்காய்ச்சலின் தொற்று கிருமிகளுக்கான (அதாவது எச்5 எச்7) சான்றெதையும் காட்டவில்லை. ஆறு மணித்தியாலங்களைக் கொண்ட குறுகிய காலப்பகுதியினுள் பறவைக்காய்ச்சல் நோயை அதிகளவில் உண்டு பண்ணும் தொற்றினை விரைந்த ஆய்வுகூட வசதி மூலம் கண்டுபிடிக்கும் தொழில்நுட்பங்களான விரைந்த அதேநேர பிசிஆர், மிருக வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தில் இவ்வாண்டில் நிறுவப்பட்டது. மேலும் இலங்கையில் பறவைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் கோழிவளர்ப்பு உரிமையாளர்களுக்கு நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டது.

**வேளாண்மைத்துறையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் வெளியீட்டை அதிகரிப்பதற்கும் பல துறைகளில் மேலதிக வலியுறுத்தலுக்கான தேவை காணப்படுகிறது.** உற்பத்தித்திறனை சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் பசுமைக்கூடுகள் போன்ற முன்னேற்றமடைந்த நீர் முகாமைத்துவ தொழில் நுட்பங்களுடான மேம்பாடுகள் மூலமும் கலப்பின வகைகள் மற்றும் மரபு வழியாக விருத்தி செய்யப்பட்ட பயிர்களின் பாவனை போன்ற மேம்பாடடைந்த தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதன் மூலமும், தொழிற்படையினரின் தேர்ச்சியை மேம்படுத்தி தொழிற்படையிடையே விரிவாக்கப் பணிகளை ஊக்குவிப்பதன் மூலமும் அதிகரிக்கப் படலாம். நெல் மற்றும் ஏனைய தானிய வேளாண்மை போன்ற சில துறைகளில் உயர் தொழிலாளர் பங்கேற்பு நாட்டில் எல்லை தொழிலாளர் உற்பத்தித் திறனை பாதித்தது. எனவே, தேவைக்கதிகமான தொழிலாளரை ஏனைய துறைகளுக்கு நகர்த்துவதன் மூலம் எல்லை தொழிலாளர் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படுவதனால் மனித வளங்கள் கூடிய வினைத்திறனுடன் கண்காணிக்கப்படுகின்றது. இந்நோக்கத்திற்காக, கூட்டு வேளாண்மை மற்றும் கம்பனி வேளாண்மையை ஊக்குவிப்பதற்கு காணி உரிமைச் சட்டங்களைத் தளர்த்தல், வேளாண்மையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றியங்களின் பங்கைப் பலப்படுத்தல் மற்றும் பொறிமுறையைத் தீவிரப்படுத்துவதன் மூலமும் வாழ்வாதார வேளாண்மை நடைமுறைகளிலிருந்து வர்த்தக அடிப்படையிலான வேளாண்மைக்கு நகர்வது முற்தேவையாக விளங்குகிறது. மேலும், உற்பத்தி மேம்பாட்டிலிருந்து நன்மையடையும் பொருட்டு தாங்கிருப்புக்களைப் பேணுவதற்கான பொறிமுறை மற்றும் பொருத்தமான சந்தைப்படுத்தல் முறைமைகள் போன்ற போதிய உட்கட்டமைப்பை வைத்திருத்தல்

## சிறப்புக்குறிப்பு 3

## வேளாண்மை - கால்நடை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் பாற்பண்ணை அபிவிருத்தி

இலங்கையினுடைய பாற்பண்ணைத்துறையினை நவீன வழிகளில் அபிவிருத்தி செய்வது பெறுமதி கூட்டல், கிராமிய ஏழை மக்களுக்கு வருமான வாய்ப்புக்களைப் பெருக்குதல், உள்நாட்டு வேளாண்மையினை பல்லினப்படுத்துதல், வேளாண்மையினை - குடிசைக் கைத்தொழில்களை முன்னேற்றுதல் போன்றவற்றினை ஏற்படுத்தும். உயர் இனப்பெருக்க கறவைப் பசுக்களைப் பயன்படுத்துதல், ஊட்டச்சத்து மிக்க கால்நடைத் தீவனங்களின் கிடைப்பனவு, உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான செயற்றிறன் வாய்ந்த முறைமை என்பவை பாற்பண்ணை அபிவிருத்திகளுக்கான முற்தேவைப்பாடுகளாக விளங்குகின்றன.

வருமான அதிகரிப்புடன் பாலுற்பத்திப் பொருட்களின் நுகர்வு கணிசமாக அதிகரித்ததனால் ஏற்படும் கேள்வி அதிகரிப்பை ஈடுகட்டக்கூடிய வகையில் உள்நாட்டுப் பாலுற்பத்தித்துறை வளர்ச்சியடையவில்லை. உள்நாட்டு வளங்களிலிருந்து கிடைக்கப் பெறும் பாலுற்பத்திகளின் அளவானது மொத்த பால் தேவையில் காற்பங்கை விடவும் குறைவானதாக காணப்படுகிறது. பரந்தளவிலான குளிர்சாதன வசதிகள் போதாமையின் காரணத்தினால் பெரும்பாலான பாலுற்பத்தி இறக்குமதிகள் உலர் பால் மா வகைகளாகவே உள்ளன.

நாட்டினுடைய பாலுற்பத்தித் துறையின் அபிவிருத்திக்கு பின்வருவன தடைகளாக இருப்பதனை சமீபகால அளவீடுகள் அடையாளம் கண்டுள்ளன.

- குறைந்த பாலினைத் தரும் கறவைப் பசுக்கள்
- உயர் உற்பத்திச் செலவுடன் ஒப்பிடுகையில் இலாபமில்லாத பண்ணை விலைகள்
- மோசமான விரிவாக்கற் பணிகள் மற்றும் கால்நடை சுகாதாரத் தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிவு குறைந்த பாற்பண்ணையாளர்கள்
- குறைந்தளவிலான தேறிய வருமானம் காரணமாக, பாற்பண்ணைத் துறைக்கான புதிய முதலீடுகளின்மை
- குறைந்தளவிலான சந்தைப்படுத்தல் வசதிகள் மற்றும் பால் பதனிடல் வசதிகளின் பற்றாக்குறை
- பொருத்தமான பால் சேகரிப்பு வலையமைப்பின் அபிவிருத்தி உள்ளடங்கலாக தொழில்நுட்பங்கள் தற்காலத்திற்கேற்றது போன்று மாற்றம் பெறாமை
- உடன்பால் மற்றும் பாலுற்பத்திகளுக்கு மாற்றமடையாது பால் மாவிலேயே நிலைத்திருக்கும் நுகர்வோர் சுவை

2007 இற்கு முன்னரான காலப்பகுதியில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவின் விலைகள் ஒப்பீட்டளவில் குறைந்த மட்டங்களில் காணப்பட்டமையால், இலங்கையின் உள்நாட்டுப் பாற்பண்ணைத்துறையில் முதலீடுகளுக்கான விசேட தூண்டல்கள் காணப்படவில்லை. எனினும், 2007இல் உணரப்பட்ட பண்டங்களின் விலைப் பணவீக்கத்தினால் உள்நாட்டுச் சந்தைகளில் இறக்குமதி செய்யப்பட்ட பால் மா வகைகளுக்கான விலைகள் சடுதியாக அதிகரித்தமையால் அதிகரித்த புதிய விலை நியதிகளுடன் போட்டியிடத்தக்கதாக உள்நாட்டு பாலுற்பத்தித் துறையை அபிவிருத்தி செய்யக்கூடிய வாய்ப்பு உருவானது. பண்ட விலைகளில் திடீரென ஏற்படும் அதிகரிப்புக்களின் போக்கு வழமையாக ஒரு கால கட்டத்தில் உயர்வடைவதும் விலைகள் மறுகால கட்டத்தில் தலைகீழாக மாற்றடைவதனாலும், துறையின் உற்பத்தித்திறன் முன்னேற்றம் கண்டால் மட்டுமே மேற்கூறியவாறான முதலீடுகள் நிலைத்திருக்கலாம்.

மத்திய வங்கியின் ஆலோசனைக்கமைவாக, 2008ஆம் ஆண்டின் வரவு செலவுதிட்டத்தில் அரசாங்கமானது, பாலுற்பத்தித் துறைக்காக ஒரு புதிய கடன் பொதியை அறிமுகம் செய்தது. இந்தத் திட்டமானது, 2008 ஏப்பிறலில் வேளாண்மை - கால்நடை அபிவிருத்தி கடன் திட்டம் என்ற பெயரில் நடைமுறைக்கு வந்தது. இத் திட்டத்தின் கீழ், சிறிய பண்ணை செயற்றிட்டங்களுக்கும் கைத்தொழில்களுக்கும் பால் மற்றும் பயிர் பதனிடுதல் பங்கேற்கும் நிதி நிறுவனங்களினால் ரூ.5,000 மில்லியன் வழங்கப்பட இருக்கிறது. பங்குபற்றும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்படும் மேற்படி நிதிக்கான சலுகை வட்டி வீதமானது உதவுதொகைகள் வட்டிக் கட்டண உதவுதொகைக்கு தகுதியுடையனவாகும். இக் கடன் திட்டத்தின் முக்கிய பண்புகள், கீழுள்ள சி.கு 3.1இல் தொகுத்துத் தரப்படுகிறது.

இக் கடன் திட்டத்தின் முக்கியமான அம்சம் யாதெனில், இக் கொடுகடனானது, கொடுகடன் தடைகளை நீக்குவதற்காக மாத்திரம் வரையறுக்கப்படவில்லை என்பதேயாகும். சந்தைப்படுத்தல் பிரச்சனைகள், பால் பதனிடலுக்கு போதுமான வசதிகள் இல்லாமை என்பன பண்ணைக் கைத்தொழில் முழுவதனையும் கருத்திற் கொண்டு நிதியிடுவதன் மூலமும் பாற்பண்ணை பதனிடுவோருக்கும் அதேவேளையில் பாற்பண்ணை வேளாண்மையாளர்களுக்கும் நிதியளிப்பதன் மூலமும் கட்டுப்படுத்தப்படுகின்றன. பால் உற்பத்தியாளர்களது நிலையான சந்தைப்படுத்தலை உறுதிப்படுத்தும் முகமாக, பதனிடுவோர் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் பால் உற்பத்தியாளர்களது வெளியீடுகளைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் பதனிடுவோர்களுக்கு விதிக்கப்பட்டது. ஒவ்வொரு கடன் விண்ணப்பமும், கால்நடை அபிவிருத்தி அமைச்சினுடைய கால்நடை வைத்தியரின் விதந்துரைப்பிலும், சிறந்த விலங்கு வேளாண்மை நடைமுறைகளுக்கமைய ஒழுக வேண்டும் என்ற நிபந்தனையின் பெயரிலுமே சிறிய பால் உற்பத்தியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்டன.

இத் திட்டம், மோசமான விரிவாக்கற் சேவைகள் தொடர்பான தடைகளையும் கட்டுப்படுத்தும். இந் நோக்கம் கருதி கால்நடை வைத்தியர்களை மூலவள ஆட்களாகக் கொண்டு பாற்பண்ணையாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யுமாறு பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. விலங்குணவு, விலங்கு ஊட்டச்சத்து, விலங்கு நோய்கள், செயற்கைமுறைச் சினைப்படுத்தல், கன்றுகளைச் சரியான முறையில் பேணுதல், சிறந்த தர பால் உற்பத்தி, பாற்பண்ணை முகாமைத்துவம் மற்றும் உயிரின வாயு தயாரிப்பு போன்ற தலைப்புகளில் கலந்துரையாடல்கள் இடம்பெறும். இத்திட்டத்தின் கீழ் வளவாளர்களுக்கான செலவானது, பங்குபற்றும் நிதி நிறுவனங்களுக்கு மத்திய வங்கியால் வழங்கப்படும். மேலும், பங்குபற்றும் நிதி நிறுவனங்களால் கள மேற்பார்வைகள் செய்தமைக்காக கால்நடை வைத்தியர்களுக்கு வழங்கப்படும் கட்டணங்களும் மீளளிக்கப்படும். கால்நடைகளைப் பெருக்குவதற்காகவும் கால்நடைகளின் செயற்றிறனை அதிகரிப்பதற்காகவும் மேற்கொள்ளப்படும் செயற்கைமுறைச் சினைப்படுத்தலுக்காக கால்நடை அபிவிருத்தி அமைச்சின் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்கள் ஊக்குவிப்பு கட்டணத்தைப் பெறுகின்றார்கள், உயிரின வாயுத் தாங்கி நிர்மாணிப்பு மற்றும் தீவனப் பயிர்ச்செய்கையை முடுக்கி விடுதல் ஆகியவற்றிற்காகவும் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

**அட்டவணை சி.கு 3.1 : கால்நடை அபிவிருத்தி கடன் திட்டத்தின் அடிப்படைப் பண்புகள்**

| தகுதி பெறும் செயற்பாடுகள் | அதிகூடிய கடன் தொகை (ரூ.) | கடன் வழங்கும் வட்டி வீதம் | வட்டி உதவு தொகை | தகுதி பெறுவதற்கான தேவைப்பாடு | அதிகூடிய மீளளிப்புக் காலம் - ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|
| • தொழுவ நிர்மாணம்<br>• பசுக்கள் கொள்வனவு<br>• திடமான தீன் வகைகள் விலங்குப் பணிகள் மற்றும் மருந்துப் பொருட்களின் கொள்வனவு<br>• கால்நடை தீவனப் பயிர்ச்செய்கை<br>• தீவனத்தைப் பண்ணைக்கு எடுத்துவரப் பாவிக்கப்படும் வாகனக் கொள்வனவு<br>• உயிரின வாயுத்தாங்கி நிர்மாணம்<br>• ஏனைய பிற தேவைப்பாடுகள் கால்நடை வைத்தியரினால் விதந்துரைக்கப்பட்டவை | 400,000 | 12 சதவீதம் | 8 சதவீதம் | | 5 |
| பால் பதனிடுதல் மற்றும் பாற்பொருட்களின் உற்பத்தி | 300 மில்லியன் | 14 சதவீதம் | 5 சதவீதம் | 1,000 தொடக்கம் 10,000 வரையான பாலுற்பத்தியாளர்களிடமிருந்து வெளியீடுகளைக் கொள்வனவு செய்யும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்ளல் | 5 |
| வேளாண்மை - அடிப்படையாகக் கொண்ட மற்றும் வேளாண்மை தொடர்பான பதனிடல் கைத்தொழில்கள் | 300 மில்லியன் | 14 சதவீதம் | 5 சதவீதம் | 1,000 தொடக்கம் 10,000 வரையான பாலுற்பத்தியாளர்களிடமிருந்து வெளியீடுகளைக் கொள்வனவு செய்யும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்ளல் | 5 |
| பதனிடுதல் தொழிற்றுறையில் களஞ்சியப்படுத்தல் வசதிகளை மேம்படுத்தல் | 300 மில்லியன் | 14 சதவீதம் | 5 சதவீதம் | 1,000 தொடக்கம் 10,000 வரையான பாலுற்பத்தியாளர்களிடமிருந்து அல்லது விவசாயிகளிடமிருந்து வெளியீடுகளைக் கொள்வனவு செய்யும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்ளல் | 5 |

அத்தியாவசியமாகும். ஒருங்கிணைத்த வேளாண்மையைப் (உதாரணமாக: விலங்கு வளர்ப்புடன் இணைந்த தெங்குப் பயிர்ச்செய்கை) பிரபல்யப்படுத்தல், இடை பயிர்ச்செய்கை (உதாரணமாக,தென்னங் காணிகளில் அன்னாசி, கொக்கோ மற்றும் கறுவா) என்பனவும் பின்பற்றுவதற்கான முக்கியமான நடைமுறைகளாகும். நீண்ட தவணை முகாமைத்துவ ஒப்பந்தங்களூடாக பண்ணைகள்/ பெருந்தோட்டங்களின் தரங்களை உயர்த்துதல் மற்றும் உணவு பதனிடல் போன்ற பெறுமதி கூட்டல் கைத்தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல் என்பவற்றினூடாக அரசுக்குச் சொந்தமான பண்ணைகள்/ பெருந்தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு தனியார்துறை முதலீடு ஊக்குவிக்கப்படலாம்.

### கைத்தொழில்

**கைத்தொழில்துறையின் பெறுமதி கூட்டல்துறை முன்னைய ஆண்டின் 7.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்; தயாரிப்பு; மின்வலு, வாயு மற்றும் நீர்; கட்டடவாக்கம் ஆகிய சகல நான்கு துணைத்துறைகளும் இவ் வளர்ச்சிக்கு சாதகமாக பங்களிப்புச் செய்தன. கைத்தொழில்துறையின் பங்கு முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 28.5 சதவீதத்திலிருந்து 28.4

சதவீதத்திற்கு சிறிதளவால் குறைவடைந்தது. இது, பெரும்பாலும் பதனிடல், தொழிற்சாலைக் கைத்தொழில் மற்றும் குடிசைக் கைத்தொழிலலை உள்ளடக்கிய தயாரிப்புத் துணைத்துறையின் பங்கு 17.7 சதவீதத்திலிருந்து 17.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையால் ஏற்பட்டதாகும். மின்வலு, வாயு மற்றும் நீர் துணைத்துறையின் பங்கும் 2007இன் 2.5 சதவீதத்திலிருந்து 2008இல் 2.4 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

**மொத்தக் கைத்தொழில் துறை வெளியீட்டில் கிட்டத்தட்ட 55 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்யும் தொழிற்சாலைக் கைத்தொழில் 2007இன் 6.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 5.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ் வளர்ச்சி முக்கியமாக உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள்; புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள்; இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள்; உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி ஆகிய ஐந்து முக்கிய வகைகளிலான விரிவாக்கத்தால் ஏற்பட்டது. தொழிற்சாலைக் கைத்தொழிலின் செயலாற்றம் முக்கிய ஏற்றுமதி நாடுகளில் நிலவிய பொருளாதார மந்தமான நிலைமைகள், கூலிகள், வலு, எரிபொருள் மற்றும் வட்டிச் செலவு உள்ளிட்ட சார்பு ரீதியிலான உயர் உற்பத்திச் செலவு, அது போல் தொடர்ச்சியான இறுக்கமான நாணயக் கொள்கை காரணமாக சார்பு ரீதியில் மெதுவான உள்நாட்டுக் கேள்வி போன்ற பிரதான காரணங்களால் மெதுவடைந்தது.

**ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தை இரண்டையும் நோக்காகக் கொண்ட கைத்தொழில்கள் 2008இல் தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டை அடைவதில் முக்கிய பங்கை வகித்தன.** முதலீட்டுச் சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லா தனியார்துறை தொழிற்சாலைக் கைத்தொழில்கள் இரண்டும், தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டின் 97 சதவீதத்திற்கு வகை கூறியிருக்கையில் எஞ்சியவை அரசதுறைக் கைத்தொழிலால் பங்களிப்பு செய்யப்பட்டன.


**அட்டவணை 2.7**
**கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதி (நிலையான 2002 விலைகளில்)**

| வகை | ரூபா மில்லியன் | | சதவீத மாற்றம் % | |
|---|---|---|---|---|
| | 2007 | 2008(அ) | 2007 | 2008(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 166,101 | 174,794 | 6.6 | 5.2 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 84,603 | 87,215 | 7.3 | 3.1 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 1,061 | 1,085 | 3.4 | 2.3 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 1,503 | 1,565 | 8.5 | 4.1 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 55,140 | 58,650 | 6.6 | 6.4 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 14,547 | 15,306 | 6.3 | 5.2 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 930 | 958 | 2.6 | 3.0 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் | 30,011 | 31,702 | 5.8 | 5.6 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 1,715 | 1,940 | 9.7 | 13.1 |
| மொத்தம் | 355,611 | 373,215 | 6.7 | 5.0 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களம்

**வரைபடம் 2.3**
**கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதியின் உள்ளடக்கம் - 2008 (2002 நிலையான விலைகளில்)**




**சாதகமற்ற உலகளாவிய பொருளாதார மற்றும் சந்தை நிலைமைகள் மற்றும் சீனா, இந்தியா, வங்களாதேசம், வியட்னாம் மற்றும் கம்போடியா போன்ற குறைந்த தயாரிப்புச் செலவைக் கொண்ட நாடுகளிலிருந்தான கடுமையான போட்டியின் முக்கிய காரணமாக ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களின் செயலாற்றம் 2008இல் நலிவடைந்தது.** எனினும், ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில்கள் ஏற்றுமதிகள் மீதான பாதகமான விளைவிலிருந்து விடுபடுவதற்கு வசதிப்படுத்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் கீழ் நன்மைகளைத் தொடர்ந்தும் பெற்றன. ஏற்றுமதிச் சந்தைகளில் அவற்றின் போட்டித்தன்மையைப் பேணுவதற்கு கைத்தொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்ட முக்கிய உபாயங்களாக உயர்தரம் மற்றும் கவர்ச்சியான வடிவமைப்பைப் பேணுவதன் மூலம் உற்பத்திகளை வேறுபடுத்தல், நேரம் பிந்தாது உற்பத்திகளை வழங்கல், வெவ்வேறான சந்தைப் பிரிவினர்கள் மீது கவனம் செலுத்துதல், உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் செலவைக் குறைக்கும் வழிமுறைகளைப் பின்பற்றல் என்பன விளங்கின. அரசு மற்றும் தொடர்பான அரச நிறுவனங்களும் ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு உதவின.

**ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களினுள், புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் வகை 2007இல் பதிவு செய்யப்பட்ட 7.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 3.1 சதவீதம் கொண்ட மெதுவான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இந்த மெதுவான வளர்ச்சி முக்கியமாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் உந்தப்பட்ட ஏற்றுமதிச் சந்தைகளின் மெதுவடைந்த கேள்வியாலும் உள்நாட்டு செலவு அழுத்தங்களுக்கு மத்தியில் குறைந்த உற்பத்திச் செலவுடைய நாடுகளிலிருந்தான உயர் போட்டியாலும் ஏற்பட்டது. உலகளாவிய நெருக்கடி தீவிரமடைந்ததைத் தொடர்ந்து விலைக் குறைப்புகளுக்கான வேண்டுகோள்கள் காணப்பட்டதுடன் முன்னோக்கிய கட்டளைகளை உறுதிப்படுத்துவதில் பிரதான வாங்குநர்கள் எச்சரிக்கையுடன் செயற்பட்டனர். இச் சூழ்நிலையில் ஆடைக் கைத்தொழிலின் முக்கிய பங்கேற்பாளர்கள் கூட கைத்தொழிலை போட்டித்தன்மை வாய்ந்ததாக தொடர்ந்து வைத்திருப்பதற்காக அவர்களின் தொழிற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் மேலதிக

நேரச் செலவுகளையும் கூலிச் செலவுகளையும் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தனர். முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + தீர்வைச் சலுகையானது 2009இலிருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டிருப்பதானது ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான போட்டியினை ஓரளவிற்கு தணிக்க உதவும்.

**கைத்தொழிலின் எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கு ஆடை தயாரிப்பாளர்கள் பல வழிமுறைகளை கைக்கொண்டனர்.** கைத்தொழிலின் முக்கிய பங்கேற்பாளர்கள் உலகளாவிய சந்தை அபிவிருத்திகளைக் கவனத்திற் கொண்டு பசுமைச் சிநேக பூர்வமான தயாரிப்புப் பொறிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளனர். இப் பொறிமுறைகள் குறைந்த வலுப்பாவனைக்கான உலகளாவிய அடிப்படை அளவுக் குறியீடு, நீரைப் பாதுகாத்தல், திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் குறைந்தளவு காபன் வெளியேற்றம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. தகவல் தொழில் நுட்பம், புடவை பதனிடல் மற்றும் தையல் இயந்திரத்தை தொழிற்படுத்தல் தொடர்பாக பயிற்சியை நோக்கமாகக் கொண்ட தொழில் வாய்ப்பை கிராமிய இளைஞர்களுக்கு வழங்கும் நோக்குடன் மாஸ் முகாமைத்துவ தொழில்நுட்ப நிறுவனம் இவ்வாண்டில் மாஸ் துல்கிரிய புடவை வலயத்தில் திறந்து வைக்கப்பட்டது. ஆடைக் கைத்தொழிலிலுள்ள முன்னணி நிறுவனங்கள் அயல் நாடுகளில் தமது தொழிற்சாலைகளை விரிவாக்குவதில் கவனம் செலுத்தினர். இதன் ஆரம்ப கட்டமாக ஆடை தயாரிப்புத் தொழிற்சாலையொன்று 2008இல் இந்தியாவில் நிறுவப்பட்டது. அத்துடன், ஐக்கிய அமெரிக்க பசுமைக் கட்டட சபையின் வலு மற்றும் சூழல் வடிவமைப்பு பசுமைக் கட்டடம் தரமிடல் முறைமை இன் கீழ் ஆடைக் கைத்தொழிலின் முக்கிய தயாரிப்பாளர் 'பிளாற்றினம் தரமிடலை' 2008இல் பெற்றார். 'காமன்ட் வித்அவுட் கில்ட்', பன்னாட்டு பொருள் முன்னிலைப்படுத்தல் நடவடிக்கையானது ஆசிய சந்தைப்படுத்தல் திறமைக்கான விருதினை பெற்றதுடன் இந்த தரமுன்னிலைப்படுத்தல் நடவடிக்கையின் கீழ் ஆடைத் தயாரிப்பாளர்கள் இலங்கை ஆடை உற்பத்திகளை ஒழுக்க நெறிவாய்ந்த உற்பத்திகள் என பன்னாட்டுச்சந்தையில் வேறுபடுத்தினர்.

**உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் வளர்ச்சியானது வகை 2007இல் பதிவு செய்யப்பட்ட 6.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 5.2 சதவீதத்தால் மெதுவடைந்தமையானது அனைத்து துணைவகைகளின் செயற்பாட்டிலும் பிரதிபலித்தது.** இவ் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, அதிகரித்த வலு மற்றும் எண்ணெய் மீதான செலவு, பன்னாட்டு உணவு நெருக்கடியால் ஏற்பட்ட அதிகரித்த மூலப் பொருட்களின் இறக்குமதிச் செலவு போன்றவற்றினால் ஏற்பட்ட உயர்ந்த உற்பத்திச் செலவு, மற்றும் உள்நாட்டு கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன காரணமாக இருந்தன. இவ் வகையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய பொருட்களாக மென்பானங்கள் உள்ளிட்ட பதனிடப்பட்ட உணவு மற்றும் குடிவகைகள், கனிம நீர், பாலை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள், ஐஸ்கிறீம், வெதுப்பக உற்பத்திகள், விசுக்கோத்துகள், பழங்கள் மற்றும் மரக்கறிகள் மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட பொருட்கள் விளங்கின. புல் வளர்ப்பு, தொழில்நுட்ப செயற்றிறனைப் பரப்பியமை, கறவைப் பசுக்களை இறக்குமதி செய்தமை மற்றும் நிதி உதவியை வழங்குதல் ஆகிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் மூலம் அரசு பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தமையின் காரணமாக 2008இல் பாலினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. அதேவேளை பதனிடப்பட்ட உணவு தயாரிப்புக் கைத்தொழிலின் முக்கிய தொழிற்பாட்டாளர்கள், வெளிநாட்டுச் சந்தையில் தமது வெளிப்படுத்துகைகளை அதிகரிக்கும் பொருட்டு இந்தியாவில் தொழிற்சாலையையொன்றைத் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2008இல் இவ் வகைக் கைத்தொழில்களால் எடுக்கப்பட்ட முக்கிய முன்னெடுப்புகளாக நுகர்வோர் விருப்பத்தேர்வுகள் மற்றும் நலத்துடன் இணங்கிச்செல்லும் வகையில் புதிய உற்பத்திகளையும் வர்த்தக அடையாளங்களையும் அறிமுகப்படுத்தல், சகல சந்தைப் பிரிவினருக்குமான பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் பொருட்களின் கிடைப்பனவினை ஊக்குவித்தல், பகிர்ந்தளிப்பு வலையமைப்பைப் பலப்படுத்தல், விற்பனை நிலையங்களை விரிவுபடுத்தல் என்பன விளங்கின.

**இரசாயனங்கள், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் வகை 2007இல் பதிவு செய்யப்பட்ட 6.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 6.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ் வகையில் முக்கிய கைத்தொழில்களான டயர்கள் மற்றும் கையுறைகள் பன்னாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தைகள் இரண்டிற்கும் தரமான பொருட்கள் பலவற்றை வழங்குகின்றன. டயர் கைத்தொழிலானது, பிரதான கைத்தொழில் நாடுகளில் ஊர்திகள் தயாரிப்புக் கைத்தொழிலின் மோசமான செயலாற்றம் காரணமாக குறைவடைந்த பன்னாட்டுக் கேள்வி காரணமாக மோசமாகப் பாதிப்படைந்தது. எனினும் தரமான உற்பத்திகளை வழங்குதல் மற்றும் விற்பனைக்குப் பின்னரான சேவைகளுக்காக டயர் உற்பத்தியாளர்கள் நவீன தொழில் நுட்பம் மற்றும் தொழில் நுணுக்கங்களைக் கையான்டனர். இதேவேளை, பாதணித் தயாரிப்பாளர்கள் இளைஞர்கள் மற்றும் குழந்தைகளை மையப்படுத்தி பலவிதமான நாகரிகப் பொருட்களை அறிமுகப்படுத்தினார்கள். இலங்கை தீந்தைகள் மற்றும் பிளாத்திக்குக் கைத்தொழிலும் வாடிக்கையாளர் விருப்பத்தேர்வுகளை நிறைவேற்றுவதற்கும் ஏற்றுமதிச் சந்தையை விரிவாக்குவதற்குமாக புதிய வீச்சிலான பொருட்களை அறிமுகப்படுத்தியது.

**உலோகமல்லா கனிப்பொருட்களின் வளர்ச்சி 2007இன் 6.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 5.2 சதவீதத்தால் மெதுவடைந்தது.** இவ் வகையின் முக்கிய கைத்தொழிலான சீமெந்துக் கைத்தொழிலின் செயலாற்றம் மூலப் பொருட்களின் உயர் செலவாலும் தனியார்துறை கட்டடவாக்கச் செயற்பாடுகளில் ஏற்பட்ட மெதுவடைவாலும் பாதிப்படைந்தது. வலு உருவாக்கம், துறைமுகம், விமான நிலையம், வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளிலிலான எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடு மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்பார்க்கப்பட்ட புனருத்தாபனம் மற்றும் மீள்நிர்மாணச் செயற்பாடுகள் சீமெந்தினதும் கட்டடப் பொருள் கைத்தொழிலினதும் உற்பத்தியை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. திருகோணமலையில் புதிதாக நிறுவப்பட்ட சீமெந்துப் பொறி அதுபோல் காங்கேசன்துறையில் மீள திறக்கப்படவுள்ள சீமெந்துத் தொழிற்சாலை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்பார்க்கப்படும்

சீமெந்துத் தேவையை அடைவதற்கு உதவும். அதிகரித்த மூலப்பொருட்கள் மற்றும் வலுச் செலவால் எழும் உயர் உற்பத்திச் செலவு, கட்டடவாக்கத் துறையிலிருந்து சுவர் ஓடுகளுக்கான வீழ்ச்சியடைந்த கேள்வி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்தும் மேசைப் பொருட்களுக்கான குறைந்த கேள்வி காரணமாக மட்பாண்டக் கைத்தொழிலின் வெளியீடு மெதுவடைந்தது. மேசைப் பொருள் கைத்தொழிலின் முக்கிய பங்கேற்பாளர்கள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் இருந்தான கேள்வியில் ஏற்பட்ட குறைப்பால் எழும் சாத்தியமான இழப்புக்களை எதிரீடு செய்வதற்கு குறிப்பாக சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்களை உள்ளடக்கிய இந்தியச் சந்தையில் கவனஞ் செலுத்தினார்கள். சுவர் ஓட்டுக் கைத்தொழில் எரிபொருள் மீதான, செலவைக் குறைப்பதற்கு "மரத்தூளிலிருந்து வாயுவை உருவாக்கல்" வலு சேமிப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. உலகளாவிய மந்த நிலைக்கு மத்தியிலும் தீவிரமான சந்தைப்படுத்தல் பிரசாரங்கள் காரணமாக வைரங்கள் பதனிடற் கைத்தொழில் 2008இல் சிறந்த செயலாற்றத்தைப் பதிவு செய்தது. எனினும், இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கச் சந்தைகளிலிருந்தான உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் சீனா, இந்தியா, ருசியா, துருக்கி மற்றும் மத்திய கிழக்கு போன்ற ஏனைய சந்தைகளில் நுழைவதில் கவனஞ் செலுத்தியது.

**உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி வகை 2007இன் 5.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 5.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இவ் வகையின் வளர்ச்சி முக்கியமாக கப்பல் கட்டல் மற்றும் பழுதுபார்த்தல் கைத்தொழில், மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொருட்கள், கம்பி வடங்களும் வயர்களும், ஊர்திகளின் உதிரிப்பாகங்கள் மற்றும் உடற்கோப்பு கைத்தொழில் முடுக்கிகள் மற்றும் மின்குமிழ் தயாரிப்பு மற்றும் அலுமினியம் கைத்தொழில் என்பவற்றால் உதவப்பட்டது. குறிப்பாக 2008இல் கப்பல் மற்றும் படகுகள் கட்டல் மற்றும் பழுதுபார்த்தல் கைத்தொழில் இத்துறையின் வெளியீட்டில் முக்கிய பங்கினை வகித்ததுடன் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகள் ஆகிய இரண்டிற்கும் பாரிய மற்றும் நடுத்தர கலங்கள் மற்றும் படகுகளை வழங்கியதன் மூலம் இத் துறையின் வெளியீட்டில் முக்கிய பங்கை வகித்தது. மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சும் அரசு தனியார் பங்குடமைகள் ஊடாக கப்பல் கட்டும் கைத்தொழிலைப் பலப்படுத்துவதற்கு பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டது.

**அரசதுறை கைத்தொழில் உற்பத்தி அளவுச் சுட்டெண்ணால் அளவிடப்பட்டவாறு அரசதுறைக் கைத்தொழில்களின் வளர்ச்சி 2008இல் 1.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் 90 சதவீதத்திற்கும் கூடுதலாக வகை கூறும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடானது, கிரமமான பேணல் வேலைக்காக எண்ணெய்த் தூய்மியானது திட்டமிடப்பட்ட வகையில் பெப்புருவரியில் மூடப்பட்டதன் காரணமாக 2008இல் 1.3 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்தது.

**முதலீட்டுச் சபையல்லாக் கைத்தொழில்களின் தொழிற்சாலையிலிருந்து சந்தைக்குச் செல்வதற்கு முன்னரான சராசரி இலாப விகிதம் உயர் உற்பத்திச் செலவாலும் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைகள் இரண்டிலுமான மெதுவடைந்த கேள்வியாலும் பாதிப்படைந்தது.** தொழிற்சாலை இலாப விகிதம் 2007இன் 1.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2008இல் 1.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ் வீழ்ச்சியானது வலு மற்றும் எரிபொருள், அதிகரித்த மூலப்பொருட்களின் செலவு மற்றும் வட்டிச் செலவு போன்றவற்றினாலான அதிகரித்த உற்பத்திச் செலவு என்பனவற்றின் காரணமாக அனைத்து துணை வகைகளிலும் குறிப்பாக புடவை, அணியும் ஆடை மற்றும் தோல் உற்பத்திகள்; உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள்; உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் மற்றும் இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் என்பவற்றில் பிரதிபலித்தது. கைத்தொழில் துறையிலான இலாப விகிதம், மத்திய வங்கியால் 2008இல் அளவீடு செய்யப்பட்ட 510

**அட்டவணை 2.8**

**முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாப விகிதங்கள் (அ)**

| வகை | மொத்த உற்பத்திச் செலவு (ரூபா மில்லியன்) 2007(ஆ) | 2008(இ) | உற்பத்தியின் மொத்தப் பெறுமதி (ரூபா மில்லியன்) 2007(ஆ) | 2008(இ) | தொழிற்சாலை இலாப விகிதம் (சதவீதம்) 2007(ஆ) | 2008(இ) |
|---|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 107,318 | 118,901 | 126,035 | 139,330 | 14.9 | 14.7 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 28,005 | 30,995 | 32,209 | 35,484 | 13.1 | 12.7 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 2,103 | 2,372 | 2,392 | 2,695 | 12.1 | 12.0 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 6,917 | 7,682 | 7,906 | 8,775 | 12.5 | 12.5 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 52,232 | 60,573 | 61,850 | 71,640 | 15.6 | 15.4 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 31,515 | 36,904 | 37,012 | 43,212 | 14.9 | 14.6 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 3,453 | 3,854 | 4,013 | 4,485 | 14.0 | 14.1 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 19,974 | 23,107 | 23,240 | 26,941 | 14.1 | 14.2 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 4,209 | 4,732 | 4,788 | 5,378 | 12.1 | 12.0 |
| மொத்தம் | 255,726 | 289,119 | 299,445 | 337,940 | 14.6 | 14.4 |

(அ) 510 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 2.9 முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழில்களின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ) (மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)**

| வகை | வலுவும் எரிபொருளும் | | கூலி | | மூலப்பொருட்கள் | | வட்டி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2007 | 2008 | 2007 | 2008 | 2007 | 2008 |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 3.7 | 4.1 | 10.3 | 10.5 | 39.8 | 40.1 | 1.5 | 1.8 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 4.9 | 5.4 | 15.3 | 15.4 | 13.2 | 13.6 | 2.6 | 3.0 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 9.5 | 10.0 | 16.2 | 16.5 | 33.0 | 33.3 | 4.4 | 4.8 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 4.4 | 4.8 | 13.1 | 13.2 | 19.6 | 19.8 | 3.6 | 3.9 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 6.9 | 7.5 | 13.5 | 13.8 | 30.7 | 31.2 | 3.8 | 4.2 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 20.7 | 21.6 | 15.0 | 15.4 | 29.4 | 29.8 | 3.6 | 4.1 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 10.2 | 10.6 | 11.2 | 11.3 | 36.0 | 36.5 | 2.6 | 2.8 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 5.4 | 5.9 | 12.4 | 12.8 | 27.0 | 27.4 | 4.3 | 4.7 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் மொத்தம் | 5.5 | 5.9 | 12.1 | 12.3 | 34.5 | 34.8 | 1.6 | 1.9 |
| மொத்தம் | 6.7 | 7.2 | 12.5 | 12.7 | 32.8 | 33.2 | 2.6 | 3.0 |

(அ) 510 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

முதலீட்டுச் சபையல்லா நிறுவனங்களின் மொத்த உற்பத்திச் செலவைவிட மேலதிகமான தொழிற்சாலையிலிருந்து சந்தைக்கு செல்ல முன்னுள்ள உற்பத்திப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது.

**மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக தொழிற்சாலைக் கைத்தொழிலின் கூலிச் செலவு 2007இல் பதிவு செய்யப்பட்ட அதே அதிகரிப்பு போன்று 2008இலும் 1.6 சதவீதத்தால் அதிகரித்தது.** பல கைத்தொழில்கள் அவற்றின் சம்பளங்களையும் கூலிகளையும் நிலையான அளவால் அல்லது 2008இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினது அதிகரிப்பின் அடிப்படையில் அதிகரித்தன. தொழிலாளர் உற்பத்தித்திறனை அதிகரித்தல், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல், சாத்தியமான உதவிப் பணிகளை வெளிமூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளல், செயலாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகளைப் பேணல் மற்றும் தற்போதைய தொழிற்படையை வேறு இடங்களின் தொழிலுக்கமர்த்தல் என்பவற்றின் மூலம் கூலிச் சுட்டெண்ணைக் குறைப்பதற்கு நிறுவனங்களால் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 2008இல் மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக வலு மற்றும் எரிபொருள் மற்றும் மூலப்பொருளின் பங்கு முறையே 7.5 சதவீதத்தாலும் 1.2 சதவீதத்தாலும் அதிகரித்தன.

**அட்டவணை 2.10 முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் தொழிலாளர் உற்பத்தித்திறன் சுட்டெண் (அ)**

1995 -100

| வகை | 2007 | 2008 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 139.2 | 142.4 | 2.3 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 121.9 | 125.7 | 3.1 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 108.3 | 111.0 | 2.5 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 108.9 | 111.4 | 2.3 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 150.2 | 155.4 | 3.5 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 120.2 | 122.7 | 2.1 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 107.5 | 109.6 | 2.0 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள மற்றும் போக்குவரத்துக் கருவி | 131.7 | 135.8 | 3.1 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 117.0 | 120.3 | 2.8 |
| மொத்தம் | 127.9 | 132.1 | 3.3 |

(அ) 510 முதலீட்டுச்சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**குறிப்பாக, பிரதேச கைத்தொழில்மயமாக்கலை ஊக்கப்படுத்துவதற்கு இணை அமைச்சுக்கள் மற்றும் தொடர்பான நிறுவனங்களூடாக அரசால் ஆரம்பிக்கப்பட்ட பல சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களால் கைத்தொழில்துறை நன்மையடைந்தது.** பிரதேச கைத்தொழில் மயமாக்கலை வசதிப்படுத்துவதற்கு *"நிபயும் சிறிலங்கா", "கமட்ட கர்மாந்த"* மற்றும் *"நகினாகிற நவோதய"* போன்ற சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அரசால் ஆரம்பிக்கப்பட்டன. 2008 இறுதியல் முதலீட்டுச் சபையால் முகாமைப்படுத்தப்பட்ட *"நிபயும் சிறிலங்கா"* இன் கீழ் 57 புதிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன; 17 நலிவடைந்த தொழில்சாலைகளுக்கு புத்துயிரளிக்கப்பட்டன; 4 தொழிற்சாலைகள் விரிவாக்கப்பட்ட வேளையில் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே 4 தொழிற்சாலைகளை மீள அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

**உள்நாட்டுக் கைத்தொழில்களை வசதிப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்குமாக வரவு செலவுத்திட்டம் 2009 மூலம் அரசு இறக்குமதிகள் பலவற்றின் மீது ஒன்றில் செஸ்வரியை விதித்தது அல்லது அதிகரித்தது.** இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில் உள்நாட்டு மூல இறப்பர் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தும் பொருட்டு இறக்குமதி செய்யப்பட்ட லேற்றெக்ஸ் இறப்பர் மீது கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 25 செஸ்வரி விதிக்கப்பட்டது. உள்நாட்டு சோள உற்பத்திக்கு ஊக்கமளிப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட சோளம் மற்றும் விலங்குத் தீன் மீது முதலீட்டுச் சபை உள்ளிட்ட சகல இறக்குமதியாளர்களுக்கும் பிரயோகிக்கத்தக்கதாக 25 சதவீத செஸ்வரி விதிக்கப்பட்டது. மேலும், எம்பிலிப்பிட்டிய மற்றும் வாழைச்சேனையில் நவீனப்படுத்தப்பட இருக்கும் இரு காகிதத் தொழிற்சாலைகளின் உற்பத்திகளை வர்த்தக ரீதியில் நிலைத்து நீடித்திருக்கும் விதத்தில் ஊக்கமளிப்பதற்காக தாள் இறக்குமதிகள் மீது 5 சதவீத செஸ்வரி விதிக்கப்பட்டது. உள்நாட்டுக் கைத்தொழிலை வசதிப்படுத்தும் பொருட்டு தளபாட இறக்குமதிகள் மீது 15 சதவீத செஸ்வரியும் இறக்குமதி செய்யப்பட்ட தோற்பொருட்கள் மீது கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.200 செஸ்வரியும் விதிக்கப்பட்டது. இது போலவே, மட்பாண்டக் கைத்தொழில், இனிப்புத் தொழிற்சாலை மற்றும்

குளிரூட்டிகள் மற்றும் மின்விசிறிகள் போன்ற உள்நாட்டு மின்பாவனைப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை வசதிப்படுத்துவதற்கு கைத்தொழில் இறக்குமதிகள் மீதான செஸ்வரி 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டது. இதேவேளை, இனிப்புப் பொருட்கள் மெலமைனைக் கொண்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவது தொடர்பான ஒழுங்குமுறை நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உள்நாட்டு உப்பு உற்பத்தி சுயதேவையைப் பூர்த்தி செய்வதை ஊக்குவிப்பதற்கும் அதை ஏற்றுமதிக் கைத்தொழிலாக அபிவிருத்தி செய்வதற்கும் இறக்குமதி செய்யப்பட்ட உப்பு மீது கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.10 செஸ்வரி விதிக்கப்பட்டது.

**வரவு செலவுத்திட்டம் 2009 குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உள்ளிட்ட உள்நாட்டுக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு மேலதிக உதவியை வழங்கியுள்ளது.** பண்ணைக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் ஒரு வழிமுறையாக இறக்குமதி செய்யப்பட்ட பால் மா மீதான சிறப்புப் பண்ட தீர்வை கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 5 இலிருந்து ரூ.15 இற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் உள்நாட்டுச் சீனிக் கைத்தொழில் மற்றும் கரும்புப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கு இறக்குமதி செய்யப்பட்ட சீனி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.14 இலிருந்து ரூ.16 இற்கு அதிகரிக்கப்பட்டது. மேலும், உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு செப்பு மற்றும் வெள்ளி போன்ற மூலப் பொருட்களுக்கு இறக்குமதித் தீர்வை மற்றும் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இதேவேளை, பிரதேச கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் “ஒரு கிராமம் - ஒரு பயிர்” மற்றும் “வேளாண்மை ஏற்றுமதி வலயங்கள்” என்ற எண்ணக்கருவை ஊக்குவிப்பதற்கு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அரசின் கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கையின் நடைமுறைப்படுத்தும் நிறுவனமான கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வதில் முக்கிய பங்கை வகித்தது.** *“கமட்ட கர்மாந்த”* நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு ஏற்கனவே 119 கைத்தொழில்களுக்கு 2008இன் இறுதிவரை ஒப்புதலளித்ததுடன் இவற்றில் 35 கைத்தொழில்கள் தற்போது வர்த்தகத் தொழிற்பாட்டிலும், 17 கைத்தொழில்கள் நிர்மாணப் பணியை ஆரம்பித்தும், 14 கைத்தொழில்கள் பொறிகளை நிறுவத் தொடங்கியுள்ளதுடன் 17 கைத்தொழில்கள் அவற்றின் பூர்வாங்க வேலையை முன்னேடுத்துள்ளன. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மற்றும் முதலீட்டுச் சபை என்பவற்றினால் ஆரம்பிக்கப்பட்ட *“நெகினாகிற நவோதய”* என்ற கிழக்கு மாகாண அபிவிருந்ததி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கைத்தொழில் அமைச்சு மற்றும் மதலீட்டுச் சபையினால் 35 திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டு 11 செயற்றிட்டங்களுக்கு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட அதேவேளை 4 செயற்றிட்டங்கள் தொழிற்பாட்டிலுள்ளன. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சால் நடைமுறைப்படுத்தப்பட்ட இன்னுமொரு முக்கிய செயற்றிட்டமான பிரதேச கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், நாடு முழுவதும் 23 கைத்தொழிற் பேட்டைகளின் அபிவிருத்தியுடன் பிரதேசங்களுக்கிடையே உடகட்டமைப்பு வசதிகளின் ஏற்றத்தாழ்வை குறைக்க உதவியது. மேலும், 2008இல் புத்தளம் கைத்தொழிற்பேட்டையின் அபிவிருத்தி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கையில் புத்தளை, கப்பல்துறை, எம்பிலிப்பிட்டி, கலிகமுவ, பலேகொடவத்த, மாதம்பை, உல்பனை (கட்டம் II) மற்றும் ஹொறணை கைத்தொழிற்பேட்டைகளின் அபிவிருத்தி வேலைகள் கைத்தொழிற்துறைக்கு உதவும் முகமாக தொடர்ந்து இடம் பெற்றன. இதேவேளை, ககட்டகஸ்திகிலிய மற்றும் இமலகமவில் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதற்கு புதிய இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. கைத்தொழில் துறையை வசதிப்படுத்துவதற்கு ஆராய்ச்சியை நடத்துவதற்கு தனியார் துறையின் பங்கேற்புடன் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சால் இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் ஓர் விரிவாக்கமாக ஹோமகமவில் முதலாவது நனோ தொழில்நுட்பப் பூங்காவை நிறுவுவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**முதலீடு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பை வசதிப்படுத்தும் முகவர்களான முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மூலங்கள் இரண்டிலிருந்தும் முதலீட்டை ஈர்ப்பதற்கு அவற்றின் உதவியை வழங்கியதுடன் ஏற்றுமதிச் சந்தைகளை மையப்படுத்தும் கைத்தொழில்களை ஊக்குவித்தது.** அரசின் பிரதேச அபிவிருத்திக் கொள்கையுடன் இணங்கிச் செல்லும் வகையில் திருகோணமலை, புத்தளம், அம்பாந்தோட்டை மற்றும் அம்பாறையில் புதிய முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நான்கு காணிகளை முதலீட்டுச் சபை இனங்கண்டுள்ளது. திருகோணமலையிலும் புத்தளத்திலும் புதிய வலயங்களின் ஆரம்ப வேலை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதலீட்டாளர்களுக்கு இடமளிக்கும் விதத்தில் அரசு தனியார் பங்குடமையின் அடிப்படையில் மீபேயில் கழிவுப் பொருட்களை பதனிடுவதற்கான முதலீட்டு வலையமைப்பொன்றினை நிறுவுவதற்கு முதலீட்டுச் சபை நடவடிக்கைகளை எடுத்தது. இத்துடன், கேனேகமவில் அறிவு நகரத்தையும் மாலம்பேயிலுள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு அருகில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை நிறுவுவதற்குமான ஆரம்ப வேலை தொடங்கப்பட்டுள்ளது. 12 சிறப்பு பொருளாதார வலயங்கள் மற்றும் புடவை பதனிடல் வலங்களை நிறுவுவதற்கு முதலீட்டுச் சபையூடாக அரசால் முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கிராமியப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் அது ஏற்பாடு செய்துள்ளது. வாத்தக வசதிகள் வழங்குவதன் மூலமும் சிறப்பு பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதன் மூலமும் ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை நடைமுறைப்படுத்தியது. மேலும், தேர்ச்சிகள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் தரத்தை உயர்த்துதல், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தைகளில் வெளிப்படுத்துகையை மேம்படுத்தல், நிபுணத்துவம் மற்றும் ஆலோசனை வழங்கல், வர்த்தகத் தகவல் மற்றும் இலத்திரனியல் - வர்த்தகப் பணிகளை வழங்கல் என்பவற்றுக்கான மாகாண ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்றுமதிச் சபையால் நடத்தப்பட்டன.

**இணைந்த ஆடைகள் அமைப்பின் கூட்டம் மற்றும் தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபையும் 2008இல் கைத்தொழில் துறைச் செயலாற்றத்தை வசதிப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தன.** பிரதான ஆடைகள் துறைக் கூட்டமான இணைந்த ஆடைகள் அமைப்பின் கூட்டம் பன்னாட்டுச் சந்தையில் *"காமண்ட் வித்அவுட் கில்ட்"* என்ற விடயத்தின் கீழ் வர்த்தக அடையாள ஊக்குவிப்புப் பிரசாரத்தை நடைமுறைப்படுத்தியது. முதலீட்டுச்சபை மற்றும் சுதந்திர வர்த்தக வலயங்களூடாக *"காமண்ட் வித்அவுட் கில்ட்"* செயல்முறைக்கு இலங்கையில் அமைந்துள்ள வெளிநாட்டுக்குச் சொந்தமான ஆடை தயாரிப்புக் கம்பனிகளைக் கொண்டு வரும் முக்கிய குறிக்கோளுடன் *"காமண்ட் வித்அவுட் கில்ட்"* இன் இவ் உலகளாவிய சந்தைப்படுத்தல் பிரசாரத்தின் கட்டம் III இனுள் இணைந்த ஆடைகள் அமைப்பின் கூட்டம் நகர்ந்தது. இணைந்த ஆடைகள் அமைப்பு ஆடைக் கைத்தொழிலில் உறுதியான தொழிற்படையை உருவாக்குவதற்கு பெண் தொழிலாளர்களை இலக்காகக் கொண்ட உள்நாட்டு நற்பெயரைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தது. தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபை இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணச் சங்கத்தின் பங்கேற்புடன் இரத்தினக்கற்களைப் பரிசோதிக்கும் ஆய்வுகூடத்தை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது.

**இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் சந்தை நுழைவை அடைவதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை இயலச் செய்வதற்கு இலங்கை சிறு கைத்தொழில் சம்மேளனம் சென்னையில் வியாபார நிலையமொன்றை நிறுவியது.** இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழிலில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கடன்திட்டமொன்று *லங்காபுத்ர* அபிவிருத்தி வங்கி, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபை என்பவற்றுடன் இணைந்த நிகழ்ச்சித்திட்டமாக தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதேவேளை, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித்துறையுடன் தொடர்பான ஒழுங்குபடுத்தப்பட்ட நிதியிடல், தேவையான கருவிகளை வழங்குதல், வியாபார மற்றும் சந்தைத் தகவலை வழங்குதல், பயிற்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி என்பனவற்றை மேம்படுத்துவதற்கு அரசால் விசேட அழுத்தம் கொடுக்கப்பட்டது. நாட்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை மேம்படுத்தும் குறிக்கோளுடன் தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சால் சிறிய மற்றும் மிகச் சிறிய கைத்தொழில் தலைவர் மற்றும் தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்புச் செயற்றிட்டம் III மற்றும் சூழல் சிநேகமாக தீர்வு நிதியம் II என்பவற்றை ஆரம்பித்தது.

**உலகளாவிய நிதியியல் நெருக்கடி, அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகள் மற்றும் உயர் உற்பத்திச் செலவு போன்ற முக்கிய பொருளாதாரத் தடைகள் 2008இல் கைத்தொழில் துறையின் வளர்ச்சி உத்வேகத்தைப் பாதித்தது.** உயர் எரிபொருள் விலைகள் தொழிற்சாலைக் கைத்தொழிலின் உற்பத்திச் செலவை நேரடியாகப் பாதித்ததுடன் இது இலாப மட்டங்களைக் குறைத்து புதிய முதலீடுகளைப் பாதித்ததுடன் விரிவாக்கத் திட்டங்களை ஒத்திப் போடுவதற்கும் இட்டுச் சென்றது. ஆடைகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், வைரங்கள் பதனிடல் மற்றும் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம் போன்ற ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களின் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக உலகளாவிய பொருளாதார மந்தநிலையால் மோசமாகப் பாதிக்கப்பட்டன. மேலும், உயர் எண்ணெய் விலைகள் மற்றும் அதிகரித்த கூலிகளால் உந்தப்பட்ட அதிகரித்த உற்பத்திச் செலவு குறிப்பாக பன்னாட்டுச் சந்தையில் கடுமையான போட்டியை எதிர்கொள்ளும் ஆடைக் கைத்தொழில் உள்ளிட்ட ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களைப் பாதித்தது. இத் தடைகளைக் குறைப்பதற்காக ஆடைக் கைத்தொழிலிலுள்ள தயாரிப்புக் கம்பனிகள் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், ஆட்குறைப்பு மூலம் செலவைக் குறைத்தல், வாங்குநர்களுக்கும் வர்த்தகர்களுக்குமிடையே கட்டளை ஒழுங்குகளை மீறாது தயாரிக்கப்பட்ட மற்றும் பசுமைமிக்க பொருட்களை ஊக்குவித்தல் என்பவற்றுக்கான சகல சாத்தியமான வழிமுறைகளையும் எடுப்பதன் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவற்றின் உற்பத்திப் பொருட்களை மீள் ஒழுங்குமுறைப்படுத்தி வருகின்றன. பன்னாட்டுச் சந்தையில் கேள்வியின் மெதுவடைவுக்கு மத்தியிலும் தணிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் மற்றும் எண்ணெய் விலைகளிலான வீழ்ச்சி என்பன 2009இல் கைத்தொழில் துறையின் செயலாற்றம் தொடர்வதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**பெருந்தோட்டப் பயிர்களை அடிப்படையாகக் கொண்ட பதனிடல் துணைத்துறை 2007இன் 2.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் தேயிலை மற்றும் இறப்பரின் அதிகரித்த ஆண்டு உற்பத்தியிலிருந்தான சாதகமாக விளைவால் உதவப்பட்டு 2008இல் 5.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** 2008இன் பிற்பகுதியில் தேயிலை உற்பத்தியிலான வீழ்ச்சியுடன், இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டில் இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட சிறிதளவான சுருக்கம் இணைந்து பதனிடல் துணைத்துறையின் விரிவாக்கத்தை மட்டுப்படுத்தியது.

**குடிசைக் கைத்தொழில் துணைத்துறையிலான வளர்ச்சி 2007இன் 5.6 சதவீதத்திலிருந்து 2008இல் 4.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** கட்டடவாக்கச் செயற்பாடுகளிலிலான மெதுவடைவு சிறு அளவிலான கட்டடங்களின் நிர்மாணத்திலான வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. அத்துடன், கைத்தறி மற்றும் தைத்தல்துறை ஆடைத்துறையால் எதிர்கொள்ளப்பட்ட கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் புடவை மற்றும் பாதணி மீதான தனியார் நுகர்வுச் செலவினத்தின் மெதுவடைவு என்பனவற்றின் காரணமாக வீழ்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், அதிகரித்த நெல் உற்பத்தியிலிருந்து எழுந்த நெல் குற்றல் செயற்பாடுகளுக்கான அதிகரித்த கேள்வி குடிசைக் கைத்தொழில் துணைத்துறை மீது சாதகமான விளைவை அதிகரித்தது.

**மின்வலு, வாயு மற்றும் நீர்த்துறை 2007இல் பதிவு செய்யப்பட்ட 4.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் சகல மூன்று துணைத்துறைகளின் மெதுவடைவுடன் 2.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.** மிகப் பெரிய துணைத்துறையான மின்வலு முன்னைய ஆண்டின் 4.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் உருவாக்கத்திலான் 3.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் உருவாக்கமானது 2007இல் 4.5 சதவீதத்தில் ஒப்பிடுகையில் 0.9 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. நீர் மின்வலு உருவாக்கம் 4.6 சதவீதத்தால் அதிகரித்து மொத்த உருவாக்கத்தில் 42

சதவீதம் கொண்ட பங்கிற்கு வகை கூறுகையில், வெப்ப மின்வலு உருவாக்கம் 1.7 சதவீதத்தால் குறைவடைந்தது. வலு உருவாக்கத்திலான மெதுவடைவு வீட்டுப்பாவனை, கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறைகள் ஆகிய சகல துறைகளிலிருந்தான கேள்வியில் ஏற்பட்ட மெதுவடைவில் பிரதிபலிக்கப்பட்டது. 2008இன் பிற்பகுதியில் கெரவலப்பிட்டி வலுப் பொறி ஆரம்பிக்கப்பட்டமை அதிகரித்த உருவாக்க இயலளவுடன் இத்துறையின் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு எதிர்வு கூறியது. வாயு துணைத் துறையிலான பெறுமதி கூட்டல் 2007இன் 2.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.2 சதவீதத்தால் ஒடுங்கியது. இது 2008 நவெம்பரிலிருந்து ஓரளவிற்குத் தணிந்த விலை அழுத்தத்தின் மத்தியிலும் வீட்டுப்பாவனை, கைத்தொழில் மற்றும் ஊர்திகளுக்கான வாயுத் துறைகளிலிருந்தான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக மொத்த வாயு விற்பனைகளில் ஏற்பட்ட 12.0 சதவீத வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும். நீர்த் துணைத்துறை முன்னைய ஆண்டின் 7.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் புதிய நீர் வழங்கல் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் மற்றும் நுகர்வோரின் பரந்த வலையமைப்புக்கு குழாய் நீர் வழங்குவதற்காக தற்போதைய செயற்றிட்டங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மேம்பாடுகளால் 3.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

**2007இல் 19.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துறை 2008இல் 12.8 சதவீதத்தால் மேலும் விரிவடைந்தது.** இரத்தினக்கற்கள் அகழ்தல் மற்றும் ஏனைய அகழ்தல் முன்னைய ஆண்டின் வளர்ச்சி வீதங்களான முறையே 13.0 சதவீதம் மற்றும் 21.9 சதவீதத்திலிருந்து முறையே 8.7 சதவீதத்திற்கும் 14.5 சதவீதத்திற்கும் மெதுவடைந்தது. 2008இல் அளவு நியதிகளில் இரத்தினக் கற்களின் ஏற்றுமதிகள் 2007இன் 5.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.6 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. கட்டடவாக்கத் துறையிலிருந்தான கேள்வியுடன் ஏனைய இரத்தினக்கற்கள் அகழ்தல் செயற்பாடுகளிலான விரிவாக்கம் நீடித்து நிலைத்திருக்கையில் ஏனைய கனிப்பொருட்களின் ஏற்றுமதிகள் 5.9 சதவீதத்தால் அதிகரித்தன.

**2008இன் முதலரைப்பகுதியில், கட்டடவாக்கத்துறையின் பெறுமதி கூட்டலின் பங்களிப்பு 9.2 சதவீதத்தால் விரிவடைந்த போதிலும் வளர்ச்சி உத்வேகம் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் 6.6 சதவீதத்திற்கு மெதுவடைந்தது.** இதனால், இத்துறை முன்னைய ஆண்டின் 9.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 7.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இத்துறையிலான மெதுவடைவு கட்டடப் பொருட்கள் இறக்குமதிகளின் 0.1 சதவீதம் கொண்ட சிறிய வளர்ச்சியிலும் உள்நாட்டு கட்டடப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்பட்ட 5.5 சதவீத மெதுவடைவிலும் பிரதிபலிக்கப்பட்டது. மேலும், கட்டடவாக்கச் செயற்பாடுகளுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள சீமெந்தும் 2008இல் 4.8 சதவீதத்தால் ஒடுங்கியது. மேம்பாலங்களின் அமைப்புடன் வீதி அபிவிருத்திச் செயற்பாடுகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் விரிவாக்கத்தை உள்ளடக்கிய வளர்ச்சிக்கு அரசதுறை முதலீட்டுச் செயற்பாடுகள் பங்களிப்புச் செய்தன. எனினும், இத் துணைத்துறையின் வளர்ச்சிக்கு தனியார் துறையின் பங்களிப்பு கட்டடவாக்கத்தின் அதிகரித்த உள்ளீட்டு விலைகள் காரணமாக குறைவாகக் காணப்பட்டது. வீடமைப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட வங்கிக் கொடுகடன் அளவும் மெதுவடைவைக் காட்டியது. இது முன்னைய ஆண்டின் 24.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.4 சதவீதத்தால் மட்டுமே வளர்ச்சியடைந்தது. கட்டுமான பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட விலைச் சுட்டெண்கள் 2008இல் பொதுவாக கட்டட மூலப்பொருட்களின் விலைமட்டங்கள் 13.8 சதவீத அதிகரிப்பினை எடுத்துக்காட்டின.

### பணிகள்

**மொ.உ.உற்பத்தியின் 59.5 சதவீதப் பங்கிற்கு வகை கூறும் பணிகள்துறை முன்னைய ஆண்டின் 7.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 5.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** மேலும், மொ.உ.உற்பத்தியிலான மொத்த வளர்ச்சிக்கு பணிகள்துறையின் பங்களிப்பும் 6 சதவீதப் புள்ளிகளால் 56.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இம் மெதுவடைவு, உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியுடன் குறிப்பாக இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் ஏற்றுமதி வர்த்தகம், போக்குவரத்து மற்றும் நிதியியற் பணிகளின் செயற்பாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலிருந்து ஏற்பட்டதாகும்.

**மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்துறை முன்னைய ஆண்டின் 6.1 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 4.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துணைத்துறைகள் 2007ஐ விட குறைந்த வீதத்தில் விரிவடைந்த போதிலும் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகம் ஆகிய மூன்று துணைத்துறைகளும் இவ்வளர்ச்சிக்குச் சாதகமாகப் பங்களிப்புச் செய்தன.

**இறக்குமதி வர்த்தகத் துணைத்துறையினுள், முதலீட்டுப் பொருட்களின் அளவின் வளர்ச்சி 3.3 சதவீதத்தால் சுருக்கமடைந்தது.** இது பெரும்பாலும் போக்குவரத்துக் கருவி வகை மற்றும், பொறி மற்றும் ஏனைய முதலீட்டு கருவி வகையிலான இறக்குமதிகளின் மெதுவான வளர்ச்சியால் ஏற்பட்டது. அளவு நியதிகளில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளில் 4.6 சதவீத வளர்ச்சி காணப்பட்டது. இவ் வளர்ச்சிக்கு வளமாக்கி இறக்குமதிகள் 35.7 சதவீத வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்தன. மசகெண்ணெய் இறக்குமதிகள் 4.2 சதவீத சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்திருக்கையில் ஏனைய பெற்றோலியத்தின் இறக்குமதி அளவுகள் 7.9 சதவீதத்தால் அதிகரித்தன. போக்குவரத்துச் செயற்பாடுகளிலான மெதுவடைவுடன் இணைந்து வெப்ப மின்வலு உருவாக்கத்திலான வீழ்ச்சி மற்றும் சார்பு ரீதியிலான எரிபொருள் விலைகள் இம் மெதுவடைவை நோக்கி பங்களிப்புச் செய்த சில காரணிகளாகும். இதேவேளை, மொத்த இறக்குமதிகளில் 15.5 சதவீதப் பங்கிற்கு வகை கூறும் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள், அளவு நியதிகளில் உணவு மற்றும் பானம் வகையின் இறக்குமதிகளிலான 34.6 சதவீத வளர்ச்சியுடன் இணைந்து 16.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

**ஏற்றுமதி வர்த்தகத் துணைத்துறை 2007இன் 8.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.9 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவு செய்தது.** புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளில் பதிவு செய்யப்பட்ட 2.5 சதவீத வளர்ச்சியுடன் கைத்தொழில் ஏற்றுமதிகள்; அளவு நியதிகளில் 0.4 சதவீதத்தால் ஒடுங்கியிருக்கையில் ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் 5.4 சதவீதத்தால் சுருக்கமடைந்தன. இது,

2007இல் புடவைகள் மற்றும் ஆடைகள், ஏனைய கைத்தொழில் பொருட்களால் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி வீதங்களான முறையே 6.8 சதவீதத்துடனும் 11.8 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் பெருமளவிற்கு முரணானதாகும். இவ்வாண்டின் முதல் எட்டு மாதங்களில் சாதகமான செயலாற்றம் காரணமாக வேளாண்மை ஏற்றுமதிகள் 3.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. 1.3 பில்லியன் ஐ.அ.டொலருக்கும் கூடுதலான வெளிநாட்டு வருவாய்களை உருவாக்கிய தேயிலை ஏற்றுமதிகள் குறிப்பாக 2008 செத்தெம்பரிலிருந்து கைத்தொழிலால் எதிர்நோக்கப்பட்ட சந்தைப் பின்னடைவிற்கு மத்தியிலும் அளவு நியதிகளில் 319.7 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்தது. இரத்தினக்கற்கள் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக இவ்வாண்டில் கனிப்பொருள் ஏற்றுமதிகள் 0.6 சதவீதம் கொண்ட சுருக்கத்தைப் பதிவு செய்தது. இறப்பர் ஏற்றுமதிகளின் அளவு உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வீழ்ச்சியடைந்தது.

**உள்நாட்டு வர்த்தகத் துணைத்துறை 2007இன் 7.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு அதிகரித்த வேளாண்மை மற்றும் கைத்தொழில் உற்பத்தி சாதகமாகப் பங்களிப்புச் செய்தது. மீன், உயர் நிலப்பயிர்கள், மரக்கறிகள் மற்றும் பழங்களின் உயர் உற்பத்தியுடன் இணைந்து நெல் உற்பத்தியிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பு சாதகமான பங்களிப்பை ஏற்படுத்தியது. இவ்வாண்டில் 4 சதவீதத்திற்கும் கூடுதலாக விரிவடைந்த உணவு, பானங்கள் மற்றும் குடிசைக் கைத்தொழில் போன்ற உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்கள் தொடர்பான வர்த்தகச் செயற்பாடுகளும் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

**சுற்றுலா விடுதி மற்றும் உணவகங்கள் துறை 2007இன் 2.3 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 5.0 சதவீதத்தால் மேலும் சுருக்கமடைந்தது.** இச் சுருக்கம் நாட்டில் நிலவிய பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் உலகளாவிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து பயணம் மற்றும் பொழுதுபோக்குச் செயற்பாடுகளின் உலகளாவிய சுருக்கம் என்பனவற்றின் காரணமாக சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட 11.2 சதவீத வீழ்ச்சியின் நேரடி விளைவால் ஏற்பட்டது. இதன் விளைவாக, வழமையாக கிட்டத்தட்ட 78 சத வீதம் வரை வகை கூறும் மேற்கு ஐரோப்பா மற்றும் ஆசியப் பிராந்தியத்திலிருந்தான சுற்றுலா வருகைகள் கிட்டத்தட்ட 14.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுச் சுற்றுலாச் செயற்பாடுகளிலும் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

**போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துறை முன்னைய ஆண்டின் 10.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** முன்னைய ஆண்டைப் போலவே, இத் துணைத்துறை போக்குவரத்து; சரக்கு கையாளல், துறைமுகம் மற்றும் சிவில் வான் போக்குவரத்து; அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல்கள் ஆகிய மூன்று துணைத் துறைகளிலுமிருந்தான சாதகமான பங்களிப்புக்களுடன் பணிகள் துறையில் ஆகக்கூடிய வளர்ச்சியை அடைந்தது.

**போக்குவரத்து துணைத்துறை முன்னைய ஆண்டின் 9.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.3 சதவீதத்திற்கு மெதுவடைந்தது.** இம் மெதுவடைவு புகைவண்டி மற்றும் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்துத் துறைகளில் பிரதிபலிக்கப்பட்டு 2007ன் 5.8 சதவீதத்துடனும் 9.4 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் முறையே 4.7 சதவீதம் மற்றும் 6.4 சதவீதம் கொண்ட குறைந்த வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தது. போக்குவரத்துத் துறையிலான இம்மெதுவடைவு இவ்வாண்டில் நிலவிய உயர் எரிபொருள் விலைகளுடன் இணைந்த எரிபொருள் நுகர்விலும் தனியார் பாவனைக்கான ஊர்திகளின் வகையிலான ஆகக் கூடிய சுருக்கத்துடன் உந்து ஊர்திகளின் பதிவில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பிரதிபலிக்கப்பட்டது (உந்து ஊர்திகள் மற்றும் இரட்டை நோக்கத்திற்கான ஊர்திகள்). கொத்தணி பேருந்து கம்பனிகளால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோ மீற்றர்கள் 2.3 சதவீதத்தால் அதிகரித்த போதிலும் இலங்கைப் புகைவண்டியால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் பாதுகாப்பு நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு வவுனியாவுக்கான பணிகள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக 2.1 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. 15 டீசல் பல்வேறு அலகுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் மூலம் புகையிரத போக்குவரத்துச் செயற்பாடுகள் 2008இல் விரிவடைந்தன. மேலும், வானூர்தி பயண துணைத்துறை சிறிலங்கன் எயார்லைன்சால் பறக்கப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் சுருக்கமடைந்தமையின் காரணமாக 6.8 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

**சரக்கு கையாளல், துறைமுகங்கள் மற்றும் சிவில் வான் போக்குவரத்துத் துணைத்துறை 2007இன் 8.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.0 சதவீதத்திற்கு மெதுவடைந்தது.** மெதுவான வளர்ச்சி பெரும்பாலும் பன்னாட்டு வர்த்தகச் செயற்பாடுகளின் சுருக்கம் காரணமாக ஏற்பட்டது. சவுத் ஏசியா கேற்வே ரேமினல் உள்ளிட்ட கொழும்புத் துறைமுகம் 3.69 மில்லியன் இருபது அடிக்குச் சமனான அலகுகளைக் கையாண்டு 9.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. மாற்றிக் கப்பலேற்றல் அளவு முன்னைய ஆண்டின் 10.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 11.5 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாண்டில் வான் சரக்குகளின் அளவுகள் 10.6 சதவீதத்தால் ஒடுங்கியது. இவ்வாண்டின் பிற்பகுதியில் பன்னாட்டு வர்த்தகச் செயற்பாடுகளின் மெதுவடைவுக்கு மத்தியிலும் முனைக்கோடிகளிலான வினைத்திறனில் ஏற்பட்ட மேம்பாடுகள் வளர்ச்சியை நோக்கிப் பங்களிப்புச் செய்தன.

**அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் துறை 2008இல் பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் 22.3 சதவீதத்தால் மேலும் விரிவடைந்து தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டில் 20 சதவீதத்திற்கும் கூடுதலான வளர்ச்சி உத்வேகத்தை நீடித்து நிலைத்திருக்கச் செய்கிறது.** குறியீட்டுப் பிரிவு பல்புடை இணைப்புக்களை உள்ளடக்கும் நிலையான இணைப்புக்களைக் கொண்ட வாடிக்கையாளர் மட்டம் இவ்வாண்டில் 3.4 மில்லியனுக்கு 25.7 சதவீதத்தால் அதிகரித்தது. நிலையான இணைப்புக்களுடன் ஒப்பிடுகையில் உயர்வீதத்தில் வளர்ச்சியடைந்த செல்லிடத் தொலைபேசியின் வாடிக்கையாளர் மட்டம் 11.1 மில்லியன் இணைப்புக்களை அடைந்தது. இது, வாடிக்கையாளர்களுக்கு நன்மையளிக்கும் செல்லிடத் தொலைபேசிப் பணி வழங்குவோரிடையேயான விலைப் போட்டிச் சூழலில் ஏற்பட்டது. ஆனால், 2007இன் 47.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 38.8 சதவீத வளர்ச்சியுடன் செல்லிடத் தொலைபேசிகளின் இணைப்புக்களில் மெதுவடைவு ஏற்பட்டது. இதனால், ஒவ்வொரு 100 ஆட்களுக்கான இணைப்புக்களின்

## சிறப்புக்குறிப்பு 4

## இலங்கையின் சுபீட்சச் சுட்டெண் - சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைவதனை நோக்கி

இலங்கையின் சுபீட்சச் சுட்டெண்ணை 2008 செத்தெம்பர் 8 ஆம் நாளன்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்டது. இச் சுட்டெண்ணை உருவாக்கியதன் நோக்கம் மாகாணங்களால் அடையப்பட்ட சுபீட்சத்தினுடைய மட்டத்தை ஒப்பீட்டு அடிப்படையில் அளவிட்டுக் கொள்வதாகும். எனவே, இது ஓர் ஒப்பீட்டு அளவீடாகும்.

அபிவிருத்தியின் நன்மைகளை சமூகத்திலுள்ள அனைத்துப் பிரிவினரும் அனுபவிப்பது உட்பட, வலுவான செல்வ உருவாக்கத்தினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்பதேயாகும். இக் கருத்தின்படி அனைத்து தேசிய கொள்கைகளினதும் இறுதியான குறிக்கோள், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதும் அதன் மூலம் முழுநாட்டினுடைய சுபீட்சத்தினை உயர்த்துவதுமேயாகும்.

அரசியலமைப்பு சட்டத்தின் 13ஆவது திருத்தத்தினால் தேவைப் படுத்தப்பட்டதற்கிணங்க சமநிலையான பிராந்திய அபிவிருத்தியின் பொருட்டு, அரசாங்கத்தின் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திலிருந்து மாகாண சபைகளுக்கு நிதிகளை வழங்குவது அல்லது ஒதுக்கீடு செய்வது தொடர்பில் சனாதிபதிக்கு பரிந்துரைகளை செய்வதற்காக நிதி ஆணைக்குழுவை இலங்கை நிறுவியது. அத்தகைய நிதிகளை ஒதுக்கீடு செய்வது தொடர்பில் ஒவ்வொரு மாகாணத்தினுடைய குடித்தொகை, தலைக்குரிய வருமானம், சமூக மற்றும் பொருளாதார சமமற்ற தன்மைகள் மற்றும் மாகாணங்களில் தலைக்குரிய வருமானத்தின் வேறுபாடுகள் என்பன கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என நிதி ஆணைக்குழு கேட்டுக்கொண்டது.

சமூக பொருளாதார முன்னேற்றங்களின் அடிப்படையில் மாகாணங்களுக்கு இடையில் தரப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு, மாகாண மட்டத்தில் சமூக பொருளாதார முன்னேற்றங்களின் மட்டங்களினுள் ஓர் பகுதியான உள்ளடக்கத்தினை பெற்றுக்கொள்வதற்கு இயலச் செய்யும் ஓர் அளவீட்டுத் தேவை நிதி ஆணைக்குழுவிற்கு இருந்தது. இதனை வசதிப்படுத்துவதற்கு மாகாணத்தினுடைய ஒப்பீட்டளவில் சுபீட்சத்திற்கான ஓர் அளவீடு அவசியமாக இருந்தது.

பரந்த நியதிகளில், மக்களுடைய நலன்கள் மற்றும் மக்களுக்கு கிடைக்கத்தக்களவு சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் என்பன ஓர் மாகாணம் அல்லது அதன் மக்களுடைய சுபீட்சத்தை அளவிடுவதற்கான முக்கிய கூறுகளாகும். சுபீட்சத்தின் சில பரந்த வழிமுறைகளுடன் தொடர்பான ஒப்பீட்டுரீதியான மாகாண அடிப்படையில் தரங்களை தொடர்பான அளவீட்டின் தேவையினை அங்கீகரிக்கின்ற விதத்தில், இலங்கை மத்திய வங்கி நிதி ஆணைக்குழுவின் ஆலோசனையுடன் இலங்கைக்கான சுபீட்சச் சுட்டெண்ணை உருவாக்கியது.

பல சுற்றுக் கலந்துரையாடல்கள் மற்றும் நிபுணத்துவக் குழுக்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் இத்தன்மை வாய்ந்த சுட்டெண்ணை உருவாக்குவதற்கு சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை கவனத்தில் எடுத்துக்கொண்ட பின்னர், 20 மாறிகளை உள்ளடக்கி இலங்கைக்கான சுபீட்சச் சுட்டெண்ணை மத்திய வங்கி உருவாக்கியுள்ளது. இம் மாறிகள் மக்களுடைய வாழ்க்கையில் வேறுபட்ட விடயங்களை பிரதிநிதித்துவப்படுத் துவதுடன் நிலையான உரிய நேரத் தரவுகளின் கிடைப்பனவு தன்மையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

**அட்டவணை சி.கு 4.1**

**இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் அமைப்பு**

| துணைச்சுட்டெண்கள் மற்றும் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணுக்கான அவற்றின் பங்களிப்பு | | மாறிகள் |
|---|---|---|
| பொருளாதாரம் மற்றும் வியாபார சூழ்நிலை 30 சதவீதம் | பொருளாதாரம் 20 சதவீதம் | 1. தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி<br>2. வேலை வாய்ப்பு வீதம்<br>3. முறைசாரா துறையின் உண்மைக்கூலிகள்<br>4. வறுமை கோட்டிற்கு மேலுள்ள மக்கள் |
| | வியாபார சூழ்நிலை 10 சதவீதம் | 5. தலைக்குரிய வியாபார புரள்வு வரி<br>6. தொழில்துறை அடர்த்தி |
| மக்களின் நலன்கள் 45 சதவீதம் | சுகாதாரம் 20 சதவீதம் | 7. '000 பேருக்கான வைத்தியசாலைக் கட்டடங்கள்<br>8. '00,000 பேருக்கான வைத்திய அதிகாரிகள்<br>9. '000 சிசு உயிர் பிழைக்கும் வீதம்<br>10. '00,000 கர்ப்பிணிகள் உயிர் பிழைக்கும் வீதம் |
| | கல்வி 20 சதவீதம் | 11. சதுர கிலோ மீற்றருக்கான பாடசாலைகள்<br>12. மாணவர் ஆசிரியர் வீதம்<br>13. இரண்டாம் நிலை கல்வியின் தொடர்ச்சி<br>14. க.பொ.த.(சா/த) மற்றும் (உ/த) பரீட்சையில் சித்திபெறும் வீதம் |
| | சொத்து 5 சதவீதம் | 15. வாகன உரிமை |
| சமூக - பொருளாதார உட்கட்டமைப்பு 25 சதவீதம் | | 16. தலைக்குரிய மின்பாவனை<br>17. தொலைபேசி அடர்த்தி<br>18. வங்கித்தொழில் அடர்த்தி<br>19. வீதி அடர்த்தி<br>20. சட்டமும் ஒழுங்கும் |

இச் சுட்டெண்ணில் உள்ளடங்கும் மாறிகள் மூன்று பிரதான துணைப்பிரிவுகளுள் வகைப்படுத்தப்படுகின்றன. இத்தகைய துணைப்பிரிவுகள், அவற்றினுடைய பங்களிப்பு மற்றும் அத்தகைய துணைப்பிரிவுகளில் மாறிகள் என்பன அட்டவணை 1இல் காட்டப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மனித அபிவிருத்தி சுட்டெண் என்பவற்றில் பயன்படுத்தும் அதே பிரிவுகளுக்கிணங்க இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணில் அனைத்து மாறிகளுக்கும் அதன் உருவாக்கத்தில் சமனான நிறையிடல் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணை பயன்படுத்தி பெறப்பட்ட தரப்படுத்தல்கள் கொள்கை வகுப்பாளர்களுக்கு அனைத்தையுமுள்ளடக்கிய பின்னணியில் மாகாணங்களின் பற்றாக்குறையான விடயங்களை கண்டறிய உதவுவதுடன் அவ்வாறான குறித்த விடயங்களை நிவர்த்தி செய்வதற்கு அதிக வழங்கல்களை ஒதுக்குவதன் மூலம் நியாயமற்ற வழங்கல்களையும் தவறான ஒதுக்கங்களையும் தடுக்க உதவும்.

இலங்கை சுபீட்சச் சுட்டெண் தரப்படுத்தல், மாகாணங்களுக்கிடையில் ஒப்பீடுகளை உருவாக்கி அதன் மூலம் அத்தகைய மாகாணங்களின் அதிகார சபைகளால் அடையப்பட வேண்டிய மாகாண மட்டத்திலான இலக்குகளை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்த முடியும்.


இவ் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணானது சுபீட்சத்தை விருத்தி செய்வதில், சமூக பொருளாதார கொள்கைகளில் செயற்றிறனை அளவிடுவதற்கும் பயன்படுத்த முடியும்.

அட்டவணை சி.கு 4.2
மாகாணங்கள்ரீதியான இலங்கை
சுபீட்சச் சுட்டெண்ணின் பெறுமதிகள் 2000 - 2007

| மாகாணம் | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 55.3 | 55.5 | 56.8 | 57.5 | 58.3 | 60.3 | 63.2 | 66.1 |
| மத்திய | 42.4 | 44.2 | 46.2 | 46.5 | 47.0 | 47.8 | 50.5 | 52.9 |
| தெற்கு | 41.7 | 42.9 | 45.1 | 45.2 | 44.4 | 47.5 | 48.8 | 51.5 |
| வடக்கு | 35.4 | 37.5 | 38.1 | 39.1 | 39.8 | 41.8 | 43.3 | 43.6 |
| கிழக்கு | 35.1 | 36.5 | 37.1 | 37.6 | 39.3 | 40.5 | 41.9 | 44.2 |
| வட மேல் | 39.8 | 41.2 | 42.7 | 43.6 | 43.9 | 45.7 | 47.5 | 49.4 |
| வட மத்திய | 38.5 | 39.5 | 41.2 | 42.2 | 42.0 | 44.1 | 45.6 | 48.4 |
| ஊவா | 38.0 | 40.3 | 41.4 | 41.4 | 42.9 | 42.3 | 45.3 | 47.8 |
| சப்பிரகமுவ | 39.1 | 40.7 | 41.3 | 41.7 | 42.4 | 43.9 | 46.1 | 48.2 |
| **இலங்கை** | **42.4** | **43.9** | **45.3** | **45.9** | **46.4** | **48.1** | **50.3** | **52.7** |

வரைபடம் சி.கு 4.1

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் அசைவுகள் 2000 மற்றும் 2007




2000 - 2007 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான மாகாணங்களின் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணினுடைய நியமங்கள் அட்டவணை 2இல் தரப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டுக்கான இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் பிரகாரம் இரண்டு மாகாணங்கள் மட்டுமே தேசிய சராசரியைக் காட்டிலும் உயர்வான சுபீட்ச மட்டத்தினை அடைந்துள்ளதை வெளிகாட்டுகிறது. பொருளாதார மற்றும் வியாபார சூழ்நிலைகளின் துணைச்சுட்டெண்களில் குறைந்த செயற்றிறனின் காரணத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மிகக் குறைந்த புள்ளிகளை ஈட்டியுள்ளன. குறிப்பாக சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற விடயங்களில் அரசாங்கத்தால் பரந்தளவில் அறிமுகப்படுத்தப்பட்ட நலன்புரி அளவீடுகள் மக்களின் நலத்துறை சுட்டெண்களில் மாகாணங்களுக்கிடையிலான வேறுபாடுகளை குறைக்கிறது. இத்தகைய விடயங்களில் இலங்கையின் பெறுபேறுகள் இதனுடைய ஒப்பீட்டு நாடுகளைவிட மிக உயர்ந்தளவு என்பது நன்கு அறியப்பட்டதொன்றாகும். இந்த சுட்டெண் புள்ளிகளை பயன்படுத்துவதிலுள்ள முக்கியத்துவம் என்னவெனில் அனைத்து துணைச்சுட்டெண்களில் முடிவுகளின் விரிவான பகுப்பாய்வு மற்றும் அவசியமான கொள்கை தலையீடுகள் மற்றும் முன்னுரிமைகளை இலங்கை அணுகுவதால் மற்றும் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் நிலைக்குத்தான மற்றும் சமாந்தர அடிப்படையில் மாகாணங்களுடைய முன்னுரிமைகளுடன் தொடர்புபடுத்தி அவற்றினுடைய மேலதிக சுபீட்சத்துக்காக ஒவ்வொரு மாகாணத்திற்கும் தொடர்புடைய பொருத்தமான நடவடிக்கையை எடுப்பதாகும்.

எண்ணிக்கையான தொலைபேசி அடர்த்தி 2008இல் 71.9 இணைப்புக்களாக மதிப்பிடப்பட்டது. இதேவேளை, இணையம் மற்றும் மின்னஞ்சலைப் பயன்படுத்துவோரின் வாடிக்கையாளர் தளம் 15.6 சதவீத வளர்ச்சியுடன் 234,000 பயன்பாட்டாளருக்கு அதிகரித்தது.

**வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத் துணைத்துறை 2007இன் 8.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.6 சதவீதத்தால் விரிவடைந்தது.** இது உலகம் முழுவதும் பல எண்ணிக்கையான நிதியியல் நிறுவனங்கள் தொழிற்பாட்டு இழப்புக்களை அறிவித்ததன் மூலம் நிதியியல் துறைக்கான மிகவும் சவால்மிக்க ஆண்டாக வந்துள்ளது. உள்நாட்டு நிதியியல் துறையும், வங்கித்தொழில் துறையின் மோசமான செயலாற்றத்தால் பிரதிபலிக்கப்பட்டவாறு மெதுவடைந்தது. வருமானங்கள் மற்றும் பிணையங்களின் முதலீடுகளிலிருந்தான வருமானத்தின் வளர்ச்சியுடன் வட்டி வருமானத்தின் வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைந்தது. வட்டியல்லா வருமானமும் மிகச் சிறியளவிலாயினும் வீழ்ச்சியடைந்தது. மேலும், காப்புறுதி மற்றும் குத்தகைக்கு விடல் செயற்பாடுகளிலான வீழ்ச்சியுடன் ஏனைய நிதியியற் பணிகளிலும் மெதுவடைவொன்றும் எடுத்துக் காட்டப்பட்டது. அதேவேளை உண்மைச் சொத்து துறையும் இவ்வாண்டுக் காலத்தில் நடவடிக்கைகளில் வீழ்ச்சியொன்றை அறிவித்தது.

**அட்டவணை 2.11** **கூட்டுக் கேள்வி**

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ரூ.மில்) | | | நிலையான (2002) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007(அ) | 2008(ஆ) | 2006 | 2007(அ) | 2008(ஆ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 2,439,816 | 2,949,712 | 3,787,438 | 1,704,633 | 1,781,906 | 1,924,807 |
| (% மாற்றம்) | 21.2 | 20.9 | 28.4 | 7.1 | 4.5 | 8.0 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் | 822,240 | 1,000,320 | 1,214,808 | 583,986 | 630,882 | 659,850 |
| (% மாற்றம்) | 25.0 | 21.7 | 21.4 | 13.4 | 8.0 | 4.6 |
| மொத்த உள்நாட்டுக் கேள்வி | 3,262,056 | 3,950,032 | 5,002,246 | 2,288,619 | 2,412,788 | 2,584,657 |
| (% மாற்றம்) | 22.1 | 21.1 | 26.6 | 8.6 | 5.4 | 7.1 |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 885,381 | 1,041,935 | 1,098,376 | 704,408 | 756,022 | 758,972 |
| (% மாற்றம்) | 11.6 | 17.7 | 5.4 | 3.8 | 7.3 | 0.4 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 1,208,757 | 1,413,278 | 1,690,056 | 902,463 | 936,154 | 978,129 |
| (% மாற்றம்) | 19.4 | 16.9 | 19.6 | 6.9 | 3.7 | 4.5 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-323,376** | **-371,344** | **-591,680** | **-198,055** | **-180,132** | **-219,157** |
| இ. மொத்தக் கேள்வி | **2,938,680** | **3,578,688** | **4,410,567** | **2,090,564** | **2,232,656** | **2,365,500** |
| (% மாற்றம்) | 19.8 | 21.8 | 23.2 | 7.7 | 6.8 | 6.0 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**அரச பணிகள் துணைத்துறை 2007இன் 6.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** முக்கியமாக ஆயுதப் படைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்கள் அரச பணிகளிலான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

**தனியார் பணிகள் துணைத்துறை முன்னைய ஆண்டின் 7.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து வீழ்ச்சியைக் காட்டியது.** இத் துறையிலான வளர்ச்சி ஏனைய தனியார் பணிகளுடன் சேர்ந்து தனியார் நலம் மற்றும் கல்விப் பணிகளின் பங்களிப்புடன் உறுதியாக நிலைத்திருந்தது. எனினும், இத்துறையில் காணப்பட்ட வளர்ச்சி உத்வேகம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் மெதுவடைந்தது.

## 2.3 செலவினம்

**மொத்த உள்நாட்டுச் செலவினம் (மொஉசெ) அல்லது பொருளாதாரத்திலுள்ள மொத்த உள்நாட்டுக் கேள்வி தனியார்துறை மற்றும் அரசதுறையின் நுகர்வாகவும் மற்றும் முதலீடாகவும் அளவிடப்படுகிறது.** 2008இல் மொத்த உள்நாட்டுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளின் நியதிகளில் ரூ.5,002 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது 2007இன் 21.1 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 26.6 சதவீதம் கொண்ட உயர் பெயரளவு வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. மொத்த உள்நாட்டுச் செலவினத்திலான அதிகரித்த வளர்ச்சி விலை மட்டங்களிலான 18.2 சதவீத அதிகரிப்பாலும் 2008இல் உண்மையான மொத்த உள்நாட்டுச் செலவினத்தின் 7.1 சதவீத வளர்ச்சியாலும் ஏற்பட்டது. இது 2007இன் விலைமட்ட அதிகரிப்பான 14.9 சதவீதத்துடனும் உண்மையான மொத்த உள்நாட்டுச் செலவினத்தின் 5.4 சதவீத வளர்ச்சியுடனும் ஒப்பிடத்தக்கது. இவ் வளர்ச்சிக்கு நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினம் இரண்டும் பங்களிப்புச் செய்தன. எனினும், முதலீட்டுச் செலவினத்தின் வளர்ச்சியை விட நுகர்வுச் செலவினம் உயர் வீதத்தில் அதிகரித்தது. மொத்த உள்நாட்டுச் செலவித்தினதும் பொருட்களின் தேறிய ஏற்றுமதிகளினதும் கூட்டுத்தொகையான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடைமுறைச் சந்தை விலைகளின் நியதிகளில் ரூ.4,411 பில்லியனுக்கு 23.2 சதவீதத்தால் அதிகரித்தது.

### நுகர்வு

**தனியார் மற்றும் அரச நுகர்வை உள்ளடக்கிய மொத்த நுகர்வுச் செலவினம் 2008இல் நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ.3,787 பில்லியனாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டின் 20.9 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 28.4 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்கிறது.** தனியார் நுகர்வு 27.9 சதவீதத்தால் வளர்ச்சிடைந்திருக்கையில் அரச நுகர்வு 30.6 சதவீதம் கொண்ட உயர் வீதத்தால் வளர்ச்சியடைந்தது. நுகர்வு வளர்ச்சி உண்மை நுகர்விலான 8.0 சதவீத விரிவாக்கத்தினதும் விலை மட்டங்களிலான 18.9 சதவீத அதிகரிப்பினதும் இணைந்த விளைவால் ஏற்பட்டதாகும். கடந்த நான்கு ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட தனியார் நுகர்வுச் செலவினத்தின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு 2008இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அதன் பங்கு 2007இன் 67.2 சதவீதத்திலிருந்து 69.7 சதவீதத்திற்கு அதிகரித்ததன் மூலம் நேர்மாறாகிய வேளையில் அரச நுகர்வின் பங்கும் 15.3 சதவீதத்திலிருந்து 2008இல் 16.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**உணவு, குடிபானம் மற்றும் புகையிலை மீதான தனியார் நுகர்வுச் செலவினத்தின் செலவினப் பங்கு, 2007இன் 20.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி வீதம் 18.0 சதவீதம் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக 2007இல் நிலவிய 41.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 37.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** இவ் வீழ்ச்சிக்கு இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் அவதானிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்களின் மெதுவடைவு காரணமாக இருக்கக்கூடும். புடவை மற்றும் பாதணி மீதான செலவினம் பெயரளவு நியதிகளில் 2007இன் 2.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 13.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. எனினும், இத் துறையின் பங்கு 2007இன் 6.4 சதவீதத்திலிருந்து 2008இல் 5.7 சதவீதத்திற்கு தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது.

**வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள்கள் மீதான செலவினம் 46.8 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது.** இது இவ்வாண்டின்

அட்டவணை 2.12 நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு

| விடயம் | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு (%) | | | சதவீத மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 2006 | 2007(அ) | 2008(ஆ) | 07/06 | 08/07 |
| 1. உணவு, குடிவகை மற்றும் புகையிலை | 41.3 | 41.0 | 37.8 | 20.0 | 18.0 |
| 2. புடவையும் காலணியும் | 7.6 | 6.4 | 5.7 | 2.0 | 13.7 |
| 3. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிப்பொருட்கள் | 10.2 | 11.1 | 12.7 | 30.7 | 46.8 |
| 4. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள், வீட்டின் தொடர்ச்சியான பராமரிப்பு | 6.6 | 6.2 | 5.8 | 12.9 | 19.5 |
| 5. நலம் | 1.5 | 1.7 | 1.8 | 32.4 | 40.3 |
| 6. போக்குவரத்து | 18.9 | 19.2 | 21.8 | 22.6 | 45.3 |
| 7. ஓய்வு, களியாட்ட பொழுதுபோக்கு | 3.0 | 3.6 | 3.6 | 43.6 | 28.9 |
| 8. கல்வி | 0.1 | 0.1 | 0.1 | 12.4 | 13.7 |
| 9. உணவகங்களும் விடுதிகளும் | 1.8 | 1.6 | 1.5 | 7.9 | 17.4 |
| 10. பல்வகைப் பொருட்களும் பணிகளும் (ஈ) | 3.8 | 4.2 | 4.9 | 33.5 | 48.2 |
| 11. வெளிநாட்டு வதிவுள்ளோர் செலவு | 9.2 | 8.9 | 7.7 | 17.2 | 10.5 |
| 12. வதிவற்றோர் செலவு நீங்கலாக | 4.0 | 3.8 | 3.3 | 14.9 | 9.9 |
| **மொத்தத் தனியார் நுகர்வுச் செலவு** | **100.0** | **100.0** | **100.0** | **20.9** | **27.9** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

பிற்பகுதியில் எரிபொருட்களின் விலை வீழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளமை என்ற உண்மைக்கு மத்தியிலும், இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மசகெண்ணெய் விலைகளிலான விரைவான அதிகரிப்பு அதைத் தொடர்ந்து மின் கட்டண வீதங்களின் மேல் நோக்கிய திருத்தங்கள் காரணமாக ஏற்பட்டது. இத்துறையின் பங்கும் 2007இன் 11.1 சதவீதத்திலிருந்து 2008இல் 12.7 சதவீதத்திற்கு தொடர்ந்து அதிகரித்தது.

**தளபாடம், வீட்டுப்பாவனை பொருட்கள் மற்றும் கிரமமான பேணல் செயற்பாடுகள் மீதான செலவிடல் பெயரளவு நியதிகளில் முன்னைய ஆண்டின் 12.9 சதவீதத்திலிருந்து 19.5 சதவீதத்திற்கு வளர்ச்சியடைந்து முக்கியமாக கட்டடப் பொருட்களின் பொது விலைகளிலான அதிகரிப்பின் தாக்கத்தைப் பிரதிபலிக்கிறது.** எனினும், இத் துறை மீதான மொத்த தனியார்துறைச் செலவினத்தின் பங்கு 2007இன் 6.2 சதவீதத்திலிருந்து மேலும் 5.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**2008இல் நலப் பணிகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு 40.3 சதவீத உயர் வளர்ச்சி வீதத்துடன் 1.8 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கையில் கல்விச் செலவினத்தின் பங்கு முன்னைய ஆண்டைப் போலவே 0.1 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது.** மொத்தச் செலவினம் மீது இவ்விரு துறைகளின் பங்குகள் பொதுமக்களுக்கு அரசால் வழங்கப்பட்ட இலவச நலக் கவனிப்பு மற்றும் கல்வி வசதிகளின் தாக்கத்தை விவரிக்கும் வகையில் தாழ்ந்த மட்டங்களிலேயே தொடர்ந்து விளங்கியது.

**இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் பேரூந்து மற்றும் புகைவண்டிக் கட்டணங்களில் அதிகரிப்புக்களுக்கு இட்டுச் சென்ற பெற்றோல் மற்றும் டீசல் விலைகளின் மேல் நோக்கிய விலைத் திருத்தங்களைத் தொடர்ந்து போக்குவரத்து மீதான செலவினம் 45.3 சதவீதம் கொண்ட உயர் வீதத்தால் வளர்ச்சியடைந்தது.** எனினும், இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் மற்றும் பேரூந்துக் கட்டணங்களின் கீழ் நோக்கிய விலைத் திருத்தங்கள் இத் துறைகள் மீதான செலவினத்தைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

**வெளிநாட்டில் வதிவோரின் செலவினத்தின் மதிப்பிடப்பட்ட பங்கு 2007இன் 17.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 10.5 சதவீத வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக 2007இன் 8.9 சதவீதத்திலிருந்து 7.7 சதவீதத்திற்கு தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது.**


**அரசதுறை நுகர்வுச் செலவினம் 2007இன் 21.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 30.6 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் அதிகரித்தது.** அரச கூலிச் செலவு மீதான செலவினம் 2008இல் மெதுவடைந்தமையால் இவ்வதிகரிப்பு அரசின் பொருட்கள் மற்றும் பணிகள் மீதான ஏனைய மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டதாகும்.

### முதலீடு

**மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம் அல்லது முதலீட்டுச் செயற்பாடுகள் மீதான செலவினம் பெயரளவு நியதிகளில் முன்னைய ஆண்டின் 21.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008 காலப்பகுதியில் 21.4 சதவீதத்தால் விரிவடைந்து ரூ.1,000 பில்லியனிலிருந்து ரூ.1,215 பில்லியனுக்கு அதிகரித்தது.** மேலும், உண்மை நியதிகளில் முதலீட்டுச் செயற்பாடுகள் முன்னைய ஆண்டின் 8.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீதத்தால் விரிவடைந்தன. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி 2008இல் ரூ.323 பில்லியனாக மதிப்பிடப்பட்டது. எனினும், மொ.உ.உற்பத்திக்கான முதலீட்டின் விகிதம் 2007இன் 28.0 சதவீதத்திலிருந்து 27.5 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

**அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் முதலீட்டுச் செயற்பாடுகளை உள்ளடக்கியிருந்த் தனியார்துறை முதலீட்டுச் செலவினம் 2008இல் பெயரளவு நியதிகளில் 15.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** 2007இன் 14.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் முதலீட்டுச் செயற்பாடுகளிலான உயர் வளர்ச்சி இவ்வாண்டில் முக்கியமாக முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் மற்றும் தொடர்பான கூலி வீதங்கள் இரண்டிலும் ஏற்பட்ட அதிகரித்த விலை மட்டங்களால் ஏற்பட்டது.

**வரைபடம் 2.4 ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்கள்**




(அ) விரிவடைந்த செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஆ) மிகின் லங்கா பிறைவேற் லிமிட்டெட் மீதான முதலீடு நீங்கலாக

இதேவேளை, தனியார்துறை முதலீட்டின் பங்கு மொத்த முதலீட்டுச் செலவினத்தின் 76.5 சதவீதத்திற்கு வகை கூறியது.

**வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் 2007இன் ஐ.அ.டொலர் 734.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2008இல் ஐ.அ.டொலர் 888.9 மில்லியன் முதலீட்டுக் கடன்பாட்டுடன் 21 சதவீதத்தால் அதிகரித்தன.** 2008இல் நாட்டுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதில் முதலீட்டுச் சபை தொடர்ந்து முக்கிய பங்கை வகித்தது. தொலைத் தொடர்பூட்டல்துறை மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் 62 சதவீதத்திற்கு வகை கூறுகையில் தயாரிப்பு மற்றும் வலு உருவாக்கத் துறைகள் முறையே 21 சதவீதத்தையும் 10 சதவீதத்தையும் ஈர்த்தன.

**முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 மற்றும் 16ஆம் பிரிவின் கீழ் 2007இன் ரூ.489.6 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் ஒப்புதலளிக்கப்பட்ட 604 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2008இல் ரூ.460.5 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 462 புதிய செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டன.** இதில் 126 புதிய செயற்றிட்டங்கள் வெளிநாட்டவர்களுக்குச் சொந்தமானதாகவும் 99 இணைந்த தொழில் முயற்சிகளாகவும் எஞ்சியவை இலங்கையருக்குச் சொந்தமானவையாகவும் காணப்பட்டன. பணிகள் துறை 2008இல் இவ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முக்கிய பெறுநராக விளங்கி 308 செயற்றிட்டங்களுக்காக ரூ. 413.7 பில்லியன் முதலீடுகளை ஈர்த்தது. பணிகள் துறையினுள், வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி, சுற்றுலா விடுதிகள், உணவகப் பணிகள் மற்றும் களியாட்டம், கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், வலு உருவாக்கப் பொறிகள், வர்த்தகத்தில் ஈடுபடும் நிலையங்கள், கணனி மென்கல அபிவிருத்தி, அழைப்பு நிலையங்கள் மற்றும் வெளியிலிருந்து வியாபாரத்தைப் பெறல் என்பன ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகளின் முக்கிய பங்களிப்புத் துறைகளாக காணப்பட்டன. இதேவேளை, தொழிற்சாலைக் கைத்தொழில் 2008இல் ரூ.46.7 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் ஒப்புதலளிக்கப்பட்ட 154 புதிய செயற்றிட்டங்களை ஈர்த்தது. இதில், உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் வகை ரூ.12.5 பில்லியன் கொண்ட ஒப்புதலளிக்கப்பட்ட மிகப் பெரிய முதலீட்டுக்கு வகை கூறியது. 2008இல் முதலீட்டுச் சபைச் சட்டம் 17ஆம் பிரிவின் கீழ் 2007இல் ஒப்புதலளிக்கப்பட்ட 73 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் விரிவாக்கத்துக்காக 34 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது. முதலீட்டுச் சபையின் கைத்தொழில்களில் அடையப்பட்ட முதலீடு 2008இல் ரூ. 100.7 பில்லியனாக விளங்கி 2008 இறுதியில் திரண்ட முதலீடு ரூ. 701.8 பில்லியனை அடைந்தது.

**அட்டவணை 2.13 இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்**

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான முதலீடுகள் (ரூ.மில்லியன்) | | | | | | தொழிலாளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | | | 2008(ஆ) | | | 2007(அ) | 2008(ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| முதலீட்டுச்சபை | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 677 | 496 | 285,440 | 300,712 | 586,152 | 346,516 | 144,873 | 491,389 | 123,131 | 60,644 |
| பிரிவு 17இன் கீழ் (ஈ) | 637 | 448 | 282,986 | 300,000 | 582,986 | 342,835 | 143,858 | 486,693 | 120,519 | 57,328 |
| பிரிவு 16இன் கீழ் | 40 | 48 | 2,454 | 712 | 3,166 | 3,681 | 1,015 | 4,696 | 2,612 | 3,316 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (ஈ) | 298 | 238 | 122,590 | 111,387 | 233,977 | 73,938 | 108,226 | 182,164 | 60,843 | 29,119 |
| பிரிவு 17இன் அடையப்பட்ட முதலீடுகள் (இ) | 1,977 | 1,989 | 364,244 | 236,849 | 601,093 | 440,408 | 261,416 | 701,824 | 451,934 | 458,165 |
| வர்த்தகத் தொழிற்பாடுகள் (இ) | 2,612 | 2,595 | 198,679 | 207,284 | 405,963 | 197,766 | 213,522 | 411,288 | 385,491 | 378,272 |
| பிரிவு 17இன் கீழ் (இ) (ஈ) | 1,823 | 1,805 | 180,995 | 197,245 | 378,240 | 180,057 | 203,483 | 383,540 | 350,870 | 343,607 |
| பிரிவு 16இன் கீழ் (இ) | 789 | 790 | 17,684 | 10,039 | 27,723 | 17,709 | 10,039 | 27,748 | 34,621 | 34,665 |
| கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 1,667 | 1,751 | வி.க | வி.க | 121,456 | வி.க | வி.க | 130,357 | 275,883 | 282,706 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(ஈ) விரிவாக்கப்பட்ட செயற்த்திட்டங்கள் உள்ளடங்கலாக

மூலங்கள் : இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

**முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் 2007இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட ரூ.181.1 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடனான 254 புதிய செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2008இல் ரூ.120.1 பில்லியன் முதலீட்டுக் கடன்பாட்டுடனான 213 புதிய செயற்றிட்டங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது.** ஒப்பந்தம் செய்யப்பட்ட இச் செயற்றிட்டங்களில், மொத்த முதலீட்டுக் கடப்பாடுகளின் 82 சதவீதத்துடன் 131 செயற்றிட்டங்கள் பணிகள் துறையிலும் எஞ்சியவை தொழிற்சாலைக் கைத்தொழிலிலும் காணப்பட்டது. பணிகள் துறையிலான முதலீட்டின் முக்கிய பெறுநர்களாக வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி, கணனி மென்கல அபிவிருத்தி மற்றும் தரவு பதியும் தொழிற்பாடுகள், சுற்றுலா விடுதிகள், உணவகப் பணிகள் மற்றும் களியாட்டம், கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், வர்த்தகத்தில் ஈடுபடும் நிலையங்கள், அழைப்பு நிலையங்கள், வெளியிலிருந்து வியாபாரத்தைப் பெறல், வலு உருவாக்கம், பிரதேச தொழிற்பாட்டுத் தலைமை அலுவலகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பணிகள் என்பன விளங்கின. இதேவேளை, 2008இல் ரூ.62 பில்லியன் முதலீட்டுடன் விரிவாக்கத்திற்கான 25 புதிய செயற்றிட்டங்கள் முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டன.

**முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 மற்றும் 16ஆம் பிரிவின் கீழ் 2008இல் வர்த்தகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்த தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை 2007இல் வர்த்தகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்த 2,502 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2,485 ஆக விளங்கியது.** மொத்த முதலீட்டில் இச் செயற்றிட்டங்களிலிருந்தான வெளிநாட்டு முதலீட்டுக் கடன்பாட்டின் பங்கு 49.1 சதவீதமாக விளங்கியது. இத் தொழிற்படும் செயற்றிட்டங்களினுள் 1,240 பணிகள் துறையில் காணப்படுகையில் 475 புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோற் பொருட்களிலும்; 180 உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகளிலும்; 155 இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளிலும்; 99 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் கருவி வகையிலும், 88 தொழிற்சாலைக் கைத்தொழிலுள் இருக்கும் உலோகமல்லா உற்பத்தி வகையிலும் காணப்பட்டன.

**2008 இறுதியில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளின் மொத்த எண்ணிக்கை ரூ.130.4 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 1,751 ஆக விளங்கியது.** கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்கள் மொத்த முதலீடுக் கடப்பாட்டின் 93 சதவீதத்துடன் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் 82 சதவீதத்திற்கு வகை கூறியது. இதில் கிட்டத்தட்ட 421 தொழில் முயற்சிகள் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோற் பொருட்கள் வகையிலும் அதைத் தொடர்ந்து இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் வகையிலும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் கருவி வகை, உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் வகை மற்றும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தி வகையிலும் காணப்பட்டன. மேலும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை 2008இல் மாகாண மாவட்டங்களில் 331 புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு உதவியதுடன் ஏற்கனவே இருக்கும் 600 தொழில் முயற்சிகளை வசதிப்படுத்தியதுடன் 1,087 சுய தொழில் அலகுகளையும் மேம்படுத்தியது.

**அரச துறை முதலீட்டுச் செயற்பாடுளிலான வளர்ச்சி 2007இல் 61.9 சதவீதம் கொண்ட விதிவிலக்கான உயர்ந்த பெயரளவு வளர்ச்சியிலிருந்து 48.3 சதவீதத்திற்கு மெதுவடைந்தது.** அரசு குறிப்பாக, வீதி அபிவிருத்தி, நீர் பகிர்ந்தளிப்பு மற்றும் மின்வலு விரிவாக்க உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் முதலீட்டுச் செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டது. இவை, மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்றிட்டம், கெரவலப்பிட்டி இணைந்த சுற்று பொறிச் செயற்றிட்டம் மற்றும் தெற்கு அதிவிரைவுப் பாதையின் கட்டடவாக்கச் செயற்றிட்டத்தை உள்ளடக்கியிருந்தது. உள்நாட்டுக் குழப்பத்தால் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களின் அபிவிருத்திக்காக கொடைஞரால் நிதியிடப்பட்ட புனரமைப்புச் செயற்றிட்டங்களும் 2008இல் தொடர்ந்து நடைபெற்றன.

## மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

**மொ.உ.உற்பத்தியால் எடுத்துக்காட்டப்பட்ட பொருளாதாரத்தின் மொத்த மூலவளக் கிடைப்பனவு மற்றும் பொருட்களினதும் பணிகளினது இறக்குமதியும் 22.2 சதவீதத்தால் 2007இன் ரூ.4,992 பில்லியனிலிருந்து 2008இல் ரூ.6,101 பில்லியனுக்கு அதிகரித்தன.** 2007இல் ஒப்பீட்டளவிலான வளர்ச்சி 20.4 சதவீதமாக விளங்கியது. உள்நாட்டு மூலவளங்களின் 23.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு மூலவளங்களின் கிடைப்பனவு 2008இல் 19.6 சதவீதம் கொண்ட குறைந்த வீதத்தில் அதிகரித்தது. மொத்த மூலவளக் கிடைப்பனவுக்கு உள்நாட்டு மூலவளங்கள் 72 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்திருக்கையில் வெளிநாட்டு மூலவளங்கள் எஞ்சிய 28 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. உண்மை நியதிகளில் மூலவளத்தின் கிடைப்பனவு 2007இன் 5.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் 5.5 சதவீதத்தால் அதிகரித்தது.

**2008இல் மொத்த மூலவளப் பயன்பாடு ரூ.3,787 பில்லியன் நுகர்வையும், ரூ.1,215 பில்லியன் மூலதன உருவாக்கத்தையும், ரூ.1,098 பில்லியன் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளையும் உள்ளடக்கியிருந்தது.** 2007இல்

**அட்டவணை 2.14**

**நடைமுறை சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**


| விடயம் | சதவீதப் பங்கு | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|
| | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | 2008(ஆ) |
| **அ. மூலவளங்கள்** | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 71.7 | 72.3 | 21.8 | 23.2 |
| பொருட்கள் பணிகளினது | 28.3 | 27.7 | 16.9 | 19.6 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **20.4** | **22.2** |
| **ஆ. பயன்பாடு** | | | | |
| நுகர்வு | 59.1 | 62.1 | 20.9 | 28.4 |
| மொத்த உள்நாட்டு | | | | |
| நிலையான மூலதனவாக்கம் | 17.7 | 18.3 | 21.0 | 26.1 |
| தனியார் | 14.3 | 14.0 | 14.3 | 19.4 |
| அரசு | 3.4 | 4.3 | 61.0 | 53.9 |
| இருப்புக்களின் மாற்றம் | 2.3 | 1.6 | 26.6 | -14.0 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 20.9 | 18.0 | 17.7 | 5.4 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **20.4** | **22.2** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை


மூலங்கள்: தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2.5 — 2008ல் பொருளாதாரம் (நடைமுறை விலைகளில்)**

பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கல்
(ரூ. 6,101 பில்லியன்)




பொருட்கள் பணிகளுக்கான கேள்விகள்
(ரூ. 6,101 பில்லியன்)




ஆகக்கூடிய பங்கான 59 சதவீதத்தைக் கொண்டுள்ள நுகர்வு 62 சதவீதத்தால் மேலும் அதிகரித்து 28.4 சதவீதம் கொண்ட அதியுயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதன் காரணமாக, நிலையான மூலதன உருவாக்கத்தின் பங்கு முன்னைய ஆண்டின் 17.7 சதவீதம் பங்கிலிருந்து 18.3 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. இதேவேளை, ஏற்றுமதிகள் 2007இன் 17.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் சார்பு ரீதியில் 5.4 சதவீதம் கொண்ட குறைந்த வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. இதனால், மூலவளப் பயன்பாட்டினுள் பொருட்கள் மற்றும் பணிகளினது ஏற்றுமதியின் பங்கு முன்னைய ஆண்டின் 20.9 சதவீதத்திலிருந்து 18.0 சதவீதத்திற்கு சுருக்கமடைந்தது.

**2008இல் உள்நாட்டு மூலவளங்களின் வழங்கல் வெளிநாட்டு மூலவளங்களின் வழங்கலை விட உயர்வீதத்தில் அதிகரித்தது.** ஆனால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களின் பங்கு 2007 உடன் ஒப்பிடுகையில் முறையே 72 சதவீதத்திலும் 28 சதவீதத்திலும் மாற்றமின்றி தொடர்ந்து காணப்பட்டது. உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் பணிகளின் 72 சதவீதப் பங்குகளில் வேளாண்மைப் பொருட்கள் மற்றும் கைத்தொழிற் பொருட்கள் முறையே 10 சதவீதத்திற்கும், 21 சதவீதத்திற்கும் வகை கூறுகையில் உள்நாட்டுப் பணிகள் 41 சதவீதத்திற்கு வகை கூறின. இப் பங்குகள் 2007இல் முறையே 8 சதவீதம், 21 சதவீதம் மற்றும் 42 சதவீதமாக காணப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் பங்கு 2007இல் உள்ளதைப் போன்றே முறையே 25 சதவீதத்திலும் 3 சதவீதத்திலும் மாற்றமின்றி தொடர்ந்து விளங்கியது.

**2007இல் நிலவிய மொத்த அதிகரிப்பின் அமைப்புடன் ஒப்பிடுகையில் 2008இல் மொத்த கேள்வியில் ஏற்பட்ட 23.2 சதவீதம் கொண்ட பெயரளவு அதிகரிப்புடன் நுகர்வு, முதலீடு மற்றும் ஏற்றுமதிகளின் அமைப்பு நுகர்விற்கு சாதகமாக மாற்றமடைந்தது.** நுகர்வின் அதிகரித்த பங்கிற்கு அதன் பங்கை 2007இன் 48 சதவீதத்திலிருந்து 2008இல் 50 சதவீதத்திற்கு அதிகரித்த தனியார்துறை நுகர்வின் உயர் வளர்ச்சி காரணமாக இருந்தது. தனியார்துறை மற்றும் அரசதுறை முதலீட்டின் பங்கு 2008இல் 15 வீதமாகவும் 5 வீதமாகவும் காணப்பட்டது. இவ்விரு ஆண்டுகளுக்கிடையே ஏற்றுமதிப் பொருட்களின் பங்கு 17 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கும் ஏற்றுமதிப் பணிகளின் பங்கு 4 சதவீதத்தில் மாற்றமின்றி இருந்ததுடன் 2008இல் பொருட்கள் மற்றும் பணிகளில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

## சேமிப்புகள்

**இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் குறிப்பாக பன்னாட்டுச் சந்தைகளில் உணவு மற்றும் எண்ணெயின் உயர் விலைகள் நிலவியதன் காரணமாக 2008இல் உள்நாட்டுச் சேமிப்புகளும் தேசிய சேமிப்புகளும் சுருக்கமடைந்தன. இது**

**அட்டவணை 2.15 — நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்புக்கள்**

| விடயம் | ரூ. மில்லியன் | | % மாற்றம் | | மொ.உ.உ.வின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | 2008 (ஆ) | 2007(அ) | 2008(ஆ) |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 3,578,688 | 4,410,567 | 21.8 | 23.2 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 2,949,712 | 3,787,438 | 20.9 | 28.4 | 82.4 | 85.9 |
| தனியார் | 2,403,167 | 3,073,651 | 20.9 | 27.9 | 67.2 | 69.7 |
| அரசு | 546,545 | 713,788 | 21.1 | 30.6 | 15.3 | 16.2 |
| 3. முதலீடு | 1,000,320 | 1,214,808 | 21.7 | 21.4 | 28.0 | 27.5 |
| தனியார் | 807,417 | 928,779 | 14.8 | 15.0 | 22.6 | 21.1 |
| அரசு | 192,903 | 286,029 | 61.9 | 48.3 | 5.4 | 6.5 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 628,976 | 623,128 | 26.1 | -0.9 | 17.6 | 14.1 |
| தனியார் | 686,683 | 711,579 | 20.7 | 3.6 | 19.2 | 16.1 |
| அரசு | -57,707 | -88,451 | 17.7 | -53.3 | -1.6 | -2.0 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -371,344 | -591,680 | -14.8 | -59.3 | -10.4 | -13.4 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -39,054 | -99,040 | 3.4 | -153.6 | -1.1 | -2.2 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றங்கள் | 245,006 | 277,712 | 23.8 | 13.3 | 6.8 | 6.3 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 834,928 | 801,800 | 27.2 | -4.0 | 23.3 | 18.2 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டுச் சேமிப்புக்களுக்கும் முதலீட்டுக்குமிடையேயான வேறுபாடான மூலவள இடைவெளியின் அதிகரிப்புக்கு இட்டுச் சென்றது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மூலவள இடைவெளி 2007இன் 10.4 சதவீதத்திலிருந்து 2008இல் 13.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2007இன் 26.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** உள்நாட்டுச் சேமிப்புகளிலான மெதுவடைவு இறக்குமதிகளிலான அதிகரித்த வளர்ச்சி மற்றும் 2008இல் ஏற்றுமதி வருவாய்களிலான மெதுவடைவுடன் தேறிய வெளிநாட்டுக் கேள்வியின் தொடர்ச்சியான தேய்வால் ஏற்பட்டிருக்கக்கூடும். உள்நாட்டுச் சேமிப்புக்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி 2008இல் ரூ.623 பில்லியனாகவோ அல்லது மொ.உ.உற்பத்தியின் 14.1 சதவீதமாகவோ விளங்கியதுடன் இது முன்னைய ஆண்டின் 17.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஒரு வீழ்ச்சியாகும். மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்களில் அரசின் குறைச் சேமிப்புக்கள் ரூ.88 பில்லியனால் மோசமடைந்திருக்கையில் தனியார்துறைச் சேமிப்புக்கள் 2008இல் ரூ.712 பில்லியனுக்கு 3.6சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

**உள்நாட்டுச் சேமிப்புக்கள், வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் மற்றும் தேறிய தனியார் மாற்றல்களின் மொத்தமாக காட்டப்பட்ட தேசிய சேமிப்புக்கள் ரூ.802 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.0 சதவீத வீழ்ச்சியாகும்.** 2008இல், தேறிய தனியார் பணவனுப்பல்கள் ரூ.278 பில்லியனுக்கு தொடர்ந்து அதிகரித்த போதிலும் 2007இன் 23.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 13.3 சதவீதம் கொண்ட குறைந்த வீதத்திலேயே அதிகரித்தது. எனினும், வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் வெளிநாட்டுத்துறையின் சாதகமற்ற அபிவிருத்திகள் காரணமாக 2008இல் மேலும் மோசமடைந்தது. இவ் அபிவிருத்திகளின் இணைந்த விளைவு யாதெனில் மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் முன்னைய ஆண்டின் 23.3 சதவீதத்திலிருந்து 18.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையாகும்.